
www.tamilarangam.net

# சுவடுகள்




"மகனுக்குப் பத்தொன்பது வயது தம்பி, நயினாதீவுத் தேரிலண்டு (ஜூன் 15) சாப்பிட்டபிறகு அஞ்சாறு பெடியள் வந்து இழுத்துக் கொண்டு போனாங்கள்.... ...பெடியள்தான். தமக்கைமார் அழுதழுது அவனை விடச் சொல்ல , 'சட்டுப் போடுவமடி' எண்டு வெருட்டினாங்கள்.

பிறகு ஒவ்வொருநாளும் 'காம்ப்'க்கு (அசோகாஹோட்டல்) நான் போய் ஒருதரமாவது மகனைக் காட்டச் சொல்லிக்கேட்டன். "இங்கை ஏன் இருக்கிறியள், போங்கோ" எண்டு திட்டினாங்கள். இருநூறு முன்னூறு தாய்மார் ஒவ்வொருநாளும் பிள்ளையளைப் பாக்க அலையுதுகள்.


"ஐயா, சோதினைக்குப் போட்ட பெடியன் ஐயா, ஒருக்காக்காட்டுங்கோ" எண்டு கெஞ்சினன், காட்டேல்லை. சில தாய்மாருக்கு பிள்ளையளைக் காட்டுவாங்கள். மொட்டையடிச்சு, இமை மயிர்ச் மாடிவிலை நிக்கிற பிள்ளையளை ஆருக்கு அடையாளம் தெரியும்?

அப்பன் கள்ளுச் சீவுறவர். அவருக்கும் சுகமில்லை, தொழிலுக்கும் போகேலாது".

—ஈழம் சென்று திரும்பிய இணைப்பேராசிரியர் ந. சண்முகரத்தினத்திடம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தாய் ஒருவரின் நேரடி வாக்குமூலம். (பேட்டி உள்ளே.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'ஒருசில வருடங்கள் உலகின் முதல்தர வீராங்கனையாக விளங்கவேண்டுமென்பதே எனது இலட்சியம்'



# இதோ ஒரு தமிழ் வீராங்கனை

பதினொரு வயதிலேயே ஒரு சிறுமி கனடா நாட்டின் தலைசிறந்த ரென்னிஸ் வீராங்கனைகள் ஐம்பதுபேரின் பட்டியலுக்குள் நுழைந்துவிட்டாள். ஆச்சரியப் படுகிறீர்களா?

'அமெரிகக்த் தேசிய கனிஸ்ட உள்ளக ரென்னிஸ்' போட்டியில் ஒற்றையர், இரட்டையர் ஆட்டங்களையும், 'பியஸ்ரா போல் கனிஸ்ட ரென்னிஸ்' ஆட்டத்தையும் வென்ற ஒரே கனேடியச் சிறுமி இவள்தான். இன்னும் ஆச்சரியப்படுங்கள்!

இதைவிடவும் ஆச்சரியத்தை உங்களுக்குத் தரும் செய்தி எதுவென்ருல்; இச் சிறுமி - சோனியா ஜெயசீலன் - ஒரு இலங்கைத் தமிழ்த் தம்பதியினரின் மகள் என்பதுதான்.

றெகி ஜெயசீலன்தான் சோனியாவின் அப்பா. கனடாவுக்குக் குடிபெயரமுன் இலங்கையின் உதைபந்தாட்டக் குழுவில் அங்கம்வகித்த இவரது துணைவியார் ரமணியும் விளையாட்டுத் துறையில் மிகுந்த ஆர்வமுடையவர். ஆறுவயதில் தற்செயலாக ரென்னிஸ் ஆடிய சோனியா, பெற்ருேரை வியப்புக் கடலில் ஆழ்த்தியபிறகு, சோனியாவின் பெற்ருேர் அவளை மேலும் வளர்ப்பதென உறுதி பூண்டனர்.

www.tamilarangam.net

ஒரு ரென்னிஸ் றக்கெற் (racquet) நிறுவனந் தவிர வேறெவரும் சோனியாவின் ஆர்வத்துக்கு பணவுதவி செய்ய முன்வரவில்லை. சோனியாவின் பயிற்சிக்கான செலவு வருடமொன்றுக்கு ஏறத்தாள 20,000 கனேடிய டொலர்களை எட்டக்கூடியது.

## கோகுலன்

"சோனியாவை எல்லாச் சுற்றுப் போட்டிகளிலும் கலந்துகொள்ள வைப்போம். அவளது ஆற்றலுக்கு வேறெவரும் ஆதரவளிக்க முன்வராவிட்டால், நாங்கள் அதைச் செய்வோம். பியானோ, தொலைக்காட்சிப் பெட்டி என்பவற்றை விற்போம்; வீட்டையுங்கூட. அவள் எங்கள் மகள்"
என்று உணர்ச்சியோடு கூறுகின்றனர் ஜெயசீலன் தம்பதியினர்.

சோனியாவுக்குப் பயிற்சி வழங்குவோரில் சிலர் உலகின் தலைசிறந்த பயிற்றுநர்கள். உலக வீராங்கனை மார்ட்டீனா நவ்ரட்டிலோவாவுக்குப் பயிற் வழங்கியவரும் இவர்களில் ஒருவர். இந் பயிற்றுநர்கள் சோனியாபற்றி கூறுகையில் 'சோனியாவின் உடலைவ் மனம் வேகமாகச் செயற்படுகிறது' எனவு 'இவ்வாறான திறமையுள்ள இளவயதில நூறுபேரை மட்டுமே உலகி காணமுடியும்' எனவும் கூறியுள்ளனர்.

சோனியாவைப் பாராட்டுவோர் அவள பெற்றோரையும் சேர்த்தே பாராட் வேண்டும். ஒருவேளை, சோனிய இலங்கையில் இருந்திருந்தால். அடுட் ஊதி, முட்டை பொரிக்க மட்டுே பழகியிருக்கக் கூடும். வேற்றுநாட்டு சூழலும் பொருளாதார வசதிகளும் உலக தரத்தில் ஒரு தமிழ் வீராங்கனை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன இப்போதும் எமது தேசத்தில் எத்தனை சோனியாக்கள் குடத்திலிட்ட விளக்கா இருக்கிறார்களோ தெரியவில்லை எவ்வாறெனினும் சோனியா காட்டிவரு ஆர்வம், திறமைக்காக காற்றிலாவது அவளுடன் கைகுலுக்கவேண்டு போலிருக்கிறது.

## அறிவாளிகள்

– ஜோ கோரி
ஸ்காட்லாந்து

படித்த நாக்குப் படைத்தவர்களாக
அழுக் கறியாத கரங்களோடு
நம்மோடு துணை நிற்கவும்
நம் இன்னல் நீங்க உதவிசெய்யவும்
முன்வாக் கூடியவர்கள்
எண்ணிப் பார்த்தால்
என் பாட்டாளித் தோழர்களே!
எத்தனை கொஞ்சம்பேர்!

கொஞ்சதூரம் நம்மோடு வருவார்கள்
பிறகு
நெஞ்சதிரப் பின்வாங்குவார்கள்
நம் எதிரே
முள்ளால் முடி சூடி
சிலுவையைச் சுமந்தபடி
யாராவது ஒரு தோழன்
வந்தவுடன்!

www.tamilarangam.net

சிவ

# சுவடுகள்

"நாம் வன்முறைமீது காதல் கொண்டவர்களோ அல்லது அதுமாதிரியான மனநோயால் பீடிக்கப்பட்டவர்களோ அல்லர். மாறாகவிடுதலையை முன்னெடுத்து போராடும் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் நேர்மையான போராளிகளே நாங்கள். சிங்கள மக்களுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்வேன், எமது பூமியில் மட்டுமல்லாது உங்கள் நாட்டின் பல பாகங்களிலும் மிக அண்மைக் காலம் வரை தமிழ் மக்கள்மீது உங்கள் நாட்டின் அதிகார அமைப்பினால் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதத்தை சரியென நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? அன்றியும் இவை மட்டுமல்லாது நம்மை நாமல்லாதவராக்கும் முயற்சியிலும், பல வழிகளிலும் ஈடுபட்டு வரும் உங்கள் அரசின் நாகரீகமற்ற நடவடிக்கைகளின் பாதிப்பில் இருந்து எம்மக்களை மீட்க நாம் முன்னிற்றமையைத்தான் தவறு என்று கொள்வீர்களா?"

–தோழர் தங்கத்துரையின் நீதிமன்ற உரையிலிருந்து.

காலத்துக்குக்காலம் பதவியிலிருந்த சிங்கள அரசுகள், தமது ஒடுக்குமுறையின் கோரக்கரங்களினால் கட்டவிழ்த்து விட்ட இனக்கலவரங்களின், தொடரில்..1983 யூலை மறக்கப்பட முடியாத கலவரமாகியது.

சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பகுதிகளிலெல்லாம் தமிழ்மக்கள்மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டது. கொழும்பில் ஓரிலட்சம் தமிழர்கள்

www.tamilarangam.net

அகதிகளாகினர். கொழும்பு வீதிகள் தமிழர்களின் குருதியால் கழுவப்பட்டன. திருநெல்வேலியில் உயிரிழந்த பதின்மூன்று சிங்களச் சிப்பாய்களின் உயிரிழப்பிற்குப் பதிலடியாக இக் கலவரம் உருவகப்படுத்தப்பட்ட போதும் ஐ.தே.க. அரசு இவ்வாறான தாக்குதலொன்றை முன்னரே மிகமிக நேர்த்தியாகத் திட்டமிட்டிருந்ததென்பது, தாக்குதலிலிருந்து தெளிவாகியது.

தமிழ் மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட விடுதலைப் போராளிகள் ஐம்பத்துநால்வர் வெலிக்கடைச் சிறையுள் அரசின் அனுசரணையுடன் வெட்டிக் கொல்லப்பட்டனர். புத்தரின் பாதங்கள் குருதியால் நனைக்கப்பட்டன. 'எனது விழிகளை வேறொருவரிட்கு அளியுங்கள், நான் எனது தாய் நாட்டைப் பார்க்க விரும்புகிறேன்' என்று முழங்கிய குரல் சுவர்களிற்குள் அடங்கியது.

ஆறுவருடங்கள் தேசமெங்கும் துப்பாக்கி வேட்டுகளும், பிணவாடையுமாய் நீண்டன. 83ஜூலைக் கலவரங்களை ஆறுவருடங்கள் கழித்து நினைவு மீட்ட இன்று நம்மிடை பலர் இல்லை. தேசத்தை விடுதலை செய்யவும், தேசபக்தியோடு எதிர்காலத்தை வரவேற்கவும் தயாராயிருந்த 15,000 பேரை ஆறுவருட காலத்திற்குள் இழந்தோம். அன்றாட வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கிய இனவெறி, மேலாதிக்க, அதிகாரவெறிபிடித்த துப்பாக்கிகளிடையே இன்றும் எமது மக்கள் வாழ்க்கையை, அதன் எல்லா அம்சங்களோடும் வாழ்ந்து காட்டுகிறார்கள்.

பல்லாயிரம் மைல் தொலைவில் நாட்டை விட்டுப்பிரிக்கப்பட்டு வாழும் நம்மவர் இன்று செய்யவேண்டிய பாரிய கடமை ஒன்று உள்ளது. எமதுமக்களின் போராட்டம், வாழ்வு, அவலம் இவைபற்றி சர்வதேசரீதியில் கருத்துணர்வொன்றைச் சரியாக வளர்த்தெடுக்க வேண்டும். இதன் மூலம் எமது தேசத்தினதும், மக்களினதும் நலன்களைப் பலியிட்டுத் தங்கள்நலன்களை வளர்த்தெடுப்போரை அம்பலப்படவும், மக்கள் விடுதலை அடையவும் நாம் துணைபுரிய முடியும். எமது ஒற்றுமை இல்லாமல் இவை எதுவுமே சாத்தியமில்லை ●

சுவடுகள் ஜூலை 1989



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத்துப் பெண்களின்

# சொல்லாத சேதிகள்

சொல்லாத சேதிகளின் முகப்பு அட்டைப்படமே. உள்ளே என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதைச் சொல்லாமல் சொல்லுகின்றது.

பெண்ணையும் மண்ணையும் உயர்த்திப் புகழ்ந்து, எதுகை, மோனை, சந்தம் என்ற சலங்கை கட்டி, வியாபாரநோக்குடன் விரசப்படுத்தாமல், மனதை அரிக்கிற நிஜங்களை எதார்த்தமாக, எந்தவித கட்டுப்பாடுமின்றி, அழகாய், மனதில் அறைவதுபோல் சொல்லிச் செல்கின்றார்கள் சகோதரிகள். பெண்மையின் பேரவலத்தைப் பேசுகின்றார்கள் இந்தப் பெண்கள்.

சிலரின் கவிதைகளில் சல சலத்துஓடும் சிற்றாறில் திடீரென ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு தெரிகின்றது. சிலர் கவிதைகளில், வெடித்துச் சிதறுகின்ற எரிமலையின் வெப்பம் என்னையும் சுடுகின்றது. கவிதையை உதடுகள் முணுமுணுக்க மனமோ. ஈழத்து ரத்தம்படிந்த வீதிகளிலும், மகனை இழந்து தவிக்கும் தாயின் முன்னும், கொடுமைகளால் ஊமையாகிப்போன அதிகாலைமௌனத்திலும் கலந்து கரைந்து நிற்கின்றது.

சங்கரி, சிரித்துக் கொண்டே விழியில் நீர்தெறிக்க இதயத்தில் உதிரம்கொட்டப் பேசுவது போல் இருக்கின்றது.

இவரது வார்த்தைகள் வெறும் கவிதைகளல்ல. பெண்ணின் நிஜமுகம். பளபளக்கின்ற ஒப்பனைக்கும் அடியில், ஆண்மையற்ற பேடிகளும், ஏன் இந்தப் பெண்ணினமுந்தான் தம் வக்கிரக் கரங்களால் இரத்தம் துளிர்க்கக் கீறிவிட்ட கீறல்கள் மறைந்திருக்கின்றன. அடுக்களை மூலையில் அமர்ந்திருந்தவளை வீதிக்கு அழைத்துவந்து பர்தாவை விலக்கிக் காட்டுகின்றார் சங்கரி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிவரமணியின் கண்களில் நம்பிக்கையொழி தெரிகின்றது. அந்த ஒழியின் அடர்த்தி, ஏழைப்பெண்ணின் இதயத்தையும் விசாரித்து உறங்கிக் கிடப்பவர்களையும் எழுப்ப வேண்டும். அவருடைய இதயத்துக்கும் கரங்களுக்கும் அந்த வலிமை இருக்கும். இருக்கவேண்டும்.

நான் அடிமையில்லை
அவர்கள்முன்
கண்ணீரைக் கொட்ட.
ஏன் அழவேண்டும்? மூலையில் உட்கார்ந்து அழுதுவிடுவதால், நாம் எதைச் சாதிக்கப் போகின்றோம்?
"விலங்குகளுக்கெல்லாம் விலங்கொன்றைச் செய்தபின் நாங்கள் பெறுவோம் விடுதலையொன்றை"

வையகத்தை வென்றி கொள்ள அழைக்கும் சன்மார்க்காவின் குரலில் தெளிவு இருக்கின்றது. இத்தெளிவு கண்ணாடிமுன் நிற்கும் கன்னியர் அனைவரையும் தெளியவைக்க வேண்டும். கண்ணாடியைத் தூர எறிந்துவிட்டு களத்துக்குச் செல்லவேண்டும்.

ஒரு தாயின் புலம்பலில் என் தாயைக் காண்கின்றேன். வீதியில் குருதிப்படுக்கையில் கிடக்கும் அந்த சகோதரனை, என் சகோதரனாகவே உணர்கின்றேன். தாயே! உன்தமகன் சாகவில்லை. நாளை வளரப்போகும் விடுதலைப் பயிரின் வித்து அவன். செந்நீரே தண்ணீர். இவனைப் போல பல சகோதரர்களின் சாவில் தான், நாளை உன்மகள் வயிற்றுப் பிள்ளைகள் நிம்மதியுடன் வாழ்க்கை வீதியில் நடக்க இயலும்.

சகோதரி இடையில் வாழைப்பழத்தில் ஊசிஏற்றுவது போல் "தனி நாடு கேட்டு மேடையேறி கனக்கக்கதைத்தவர்கள் அயல் நாட்டில் விருந்துண்டு பாதுகாப்பாய் இருக்கையிலே ஊருக்காய் மடிந்தபின்னை தெருப்புழுதியில் கிடக்கிறான்" என எட்டப்பர் தலைகளில் ஓங்கிக் குட்டுகிறார்.
"நித்திரை செய்தகாலம் முடிந்தது நீதியைக் கேட்கும் காலம் வந்தது"

ரங்காவின் கரங்களைப் பிடித்துக் குலுக்க வேண்டும் போல் உள்ளது. சந்தர்ப்ப வசத்தால் ஒரு பெண்ணின் உடல் கயவாளால் கையாளப்பட்டால் அது பெண்ணின் குற்றமா? அழகான வீணையை எடுத்து ஒரு வெறியன் தாறுமாறாக வாசித்தால் அதில் அபஸ்வரம் தான் கேட்கும். அது வீணையின் குற்றமா....?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"கற்புக்காய் கண்ணீர் வடிக்க நான் ஒன்றும் கண்ணகியல்ல மானத்தை நினைத்து நிற்க நான் ஒன்றும் இழக்க வில்லை, தற்கொலையில் உயிரைமாய்க்க நான் ஒன்றும் கோழையல்ல"

அழுத்தமான வரிகள் கயவனின் நெஞ்சத்தில் ஆணி அடிக்கிற வார்த்தைகள்.

"எனது பாதங்கள் தொடரும்
பயணத்தில்
முடிந்தால்....முடிவிருந்தால்
உண்மையிலும் உண்மையாக
எவராவது வாழ வரலாம்"

இங்குதான் நான் நெஞ்சில் உறுதியும் நேர்மைத்திறமும், நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையுமாய் பாரதியின் கவிதைப்பெண்ணை சந்திக்கிறேன். காலில் அசிங்கம் பட்டால் கழுவிவிட்டுச் செல்வதில்லையா? உடலும் உறுப்புக்களும் மட்டுமா பெண்? அவள் ஆத்மாவும், மனமும் கொண்டவள் அல்லவா?

புரட்சித் தாய்க்கு தன் மூத்த புதல்வனைத் தந்துக் கொடுத்த தாய் ஒருத்தி தன் இளையமகனிடம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"மனிதநேயத்தை இழந்துவிடாதே
மக்களை அதிகம் நேசிக்க பழகு"
என்கிறாள்.

தினமும் வக்கிரங்களைச் சந்தித்தாலும் மனிதாபிமானத்தை இழந்துவிடாத தாயுள்ளத்தை ஔவையின் கவிதைகளில் காண்கிறோம்.

"கனவு காண்பதில்லை, புத்தம் புதியதாய் உலகைக் காணவும், நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் கரங்களை இணைத்து நிற்கவே விழைகிறேன்".


செல்வியின் கவிதைகளில் பழைய கால இனிமையைத் திரும்பப் பெறும் ஏக்கம் தெரிகிறது. மஜீட் நீறுபூத்த தணலாய் பெண்ணின் உள்ளே கனன்று கொண்டிருக்கும் நெருப்பை இனம் காட்டுகிறார். ரேணுகா, பிரியமானவருடன் இணைந்தாலும் பெண்ணிற்குக் கிடைக்கும் சந்தைப் பொருள் மதிப்பை நினைத்து மயங்கி விழுகிறாள், உங்கள் நிலை உணர்ந்த நீங்களே மயங்கி விழுந்தால் எப்படி? உணராதவர்களும் உணரவைத்தல் என்ற மாபெரும் கடமை உங்களுக்கு உண்டு அல்லவா?

மைத்ரேயி மாய முட்கிரீடங்களை கழற்றி எறிந்துவிட்டுப் பெண்கள் தங்களைச் சுற்றிப் போட்டிருக்கும் வட்டத்தை விட்டு வெளிவர புரட்சிக்கரம் நீட்டுகிறார்.

மொத்தத்தில் இவர்கள் கவிதைகளில் சோகச்சிரிப்பும், கோபநெருப்பும் வெடிக்கிறது. அந்த நெருப்பின் ஒளியில், இருளில் முடங்கித் தவிக்கும் பெண்ணினம் விழித்தெழ வேண்டும்.

— மெய். இரா. பொற்கொடியின் விமர்சனத்திலிருந்து. —

(சொல்லாத சேதிகள் கவிதை தொகுப்பு, பெண்கள் ஆய்வுவட்டம் நல்லூர்)





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏழு வருட காலத்தின் பின் அண்மையில் இலங்கை சென்று திரும்பிய இணைப்பேராசிரியர் ந.சண்முகரத்தினம் (சமுத்திரன்) அவர்கள் தனது நேரடி அனுபவங்களை நோர்வே தமிழர்களுடன் பகிர விரும்பினார். ஒஸ் விவசாயப்பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் அவரை அவரது இல்லத்தில் சந்தித்தோம். அவருடன் நடத்திய பேட்டியை வாசகர்களுக்காகத் தொகுத்துத் தருகிறோம். - சுவடுகள்.



கேள்வி—நீங்கள் இலங்கை சென்றது தனிப்பட்ட பயணமா அல்லது..?

பதில்—ஒல்லாந்து நாட்டு உதவி நிறுவனம் ஒன்றின் புனரமைப்புத் திட்டங்கள் செயற்பாடாவது பற்றி மதிப்பிடவே அந் நிறுவனத்தின் சார்பில் அங்கு சென்றேன்.

கேள்வி—எந்த நாட்களில் சென்றீர்கள், நீண்ட நாட்களின்பின் நாடு திரும்பிய போது உங்கள் அனுபவம் எப்படியிருந்தது?

பதில்—ஜூன் மாதம் 15ம் திகதி கொழும்பு சென்ற நான் அங்கிருந்து 23ம் திகதி யாழ்ப்பாணம் சென்று ஒருவாரகாலம் அங்கு தங்கியிருந்தேன். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்றபோது விமானத்தில் பயணம் செய்தேன். அதிக ஆட்களை ஏற்றிய ஒரு பஸ்பயணம் போல (பயணிகள் நின்றபடியும்) அந்தப் பயணம் அமைந்திருந்தது.

நீண்டகாலத்திற்குப்பின் என்னைச் சந்தித்த எனது சித்தப்பா ஒருவர் வழமையான உபசரிப்புகளின்பின் முதலில் கேட்ட கேள்வி 'நீ ஏன் வந்தனி?' என்பதுதான். 'எவ்வளவு காலம் நிக்கப் போறாய்?', 'ஏன் அவ்வளவு காலம் நிக்கவேணும்?' என்று தொடர்ந்த கேள்விகளுக்குப் பின் அவர் சொன்னார் 'அரசியல் விவாதத்திலை ஈடுபடாதை, அந்தக்காலம் இப்ப இல்லை.'

இவற்றை விட முக்கியமானது எனது நண்பர் ஒருவர் கூறிய அறிவுரைதான். 'இங்கை ஒரு 'பொன் விதி' (கோல்டன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உபடீ) இருக்கு, இரண்டு காரணங்களுக்காகத்தான் வாய் திறக்கலாம் ஒன்டு சாப்பிட, மற்றது பல்துலக்க.' என்ற அந்த அறிவுரை அங்கிரு ந்த போதுதான் எனக்கு விளங்கியது.

கேள்வி-இந்தியப் படையினரின் நடவடிக்கைகளால் ஏற்பட்ட பாதிப்புக்களை உங்களால் நேரடியாக அவதானிக்க முடிந்ததா?

பதில்-நிச்சயமாக. கொலை, குண்டுவீச்சு, தாக்குதல், வீடழிப்பு, பாலி யற் துன்புறுத்தல் என்று நீளும் இநதப்பட்டியல் உலகம் அறிந்ததுதான். தமிழ் அகதிகள் புனர்வாழ்வுச் சங்கத்தில் மட்டும் 4000பேர் அண்மை க்காலத்தில் தாங்கள் விதவைகளாகியுள்ளதாகக் கூறியுள்ளனர். இவைபற்றி சர்வதேச மன்னிப்புச்சபையின் இரண்டாவது அறிக்கையும் அண்மையில் வெளிவந்துள்ளது. ஆனால் எனது வேலை தொடர்பாக நான் சந்தித்தவர்கள் பெரும்பாலும் ஏழைகள். இவர்கள் அடையும் துன்பம் சரியாக வெளிக்காட்டப்படவில்லை. ஒரு வாரகாலத்தில் நாரந்தனை முதல் கிளிநொச்சிவரை 12 வெவ்வேறு கிராமங்களைச் சேர்ந்த 650பேரை நான் நேரடியாகச் சந்தித்தேன். இவர்களில் எழுபதுவீதமானோர் பெண்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டியது.

கேள்வி-அந்த மக்களின் துயரங்களைப் பற்றிச் சிறிது கூறமுடியுமா?

பதில்-ஒரு பிரச்சனை பயிரழிவு. இந்தியப்படையினர் எந்தப்பயிரானாலும் அதனைப்பற்றிக் கவலையின்றி வாகனங்களுடன் தோட்டங்களூடாகவே செல்கின்றனர். விவசாயத்தை மட்டுமே நம்பிவாழ்பவர்கள் இதனால் பெருமளவு பாதிக்கப்படுகிறார்கள். இரண்டாவது பிரச்சனை, தேடல், நிர்ப்பந்த ஆட் சேர்ப்பு போன்றவற்றால் ஆண்கள் தலைமறைவாகவே வாழவேண்டிய நிலை. இதனால் குடும்பங்களின் முழுப்பொறுப்பையும் பெண்களே ஏற்றுள்ளனர். போக்குவரத்து வசதிகளும் குறைவாய் இருப்பதால் விவசாயிகள் மிகவும் கஸ்டப்படுகிறார்கள்.

கேள்வி-இவ்வாறு குடும்பப் பொறுப்புக்கள் பெண்களிடம் மாறியதால் ஏதாவது புதிய பிரச்சனைகள் தோன்றியுள்ளனவா?

பதில்- இது மிகச்சிக்கலான நிலையை உருவாக்கியிருக்கிறது. ஆண்கள் வெளியில் சென்று செய்யும் கடமைகளைப் பெண்களே செய்கின்றனர். கூலிவேலையைக்கூட. ஆனால் ஆண்கள் செய்யும் அதேவேலைக்கு பெண்களுக்கு மிகக்குறைந்த சம்பளமே வழங்கப்படுகிறது. ஆண்கள் 60ரூபா பெற்றால் பெண்கள் 25ரூபாதான் பெறமுடியும். இதுபற்றி நான் சந்தித்த பெண்களைக் கேட்ட போது 'அது சரியில்லைத்தான் ஆனால் ஒன்றும் செய்ய முடியாது' என்றனர். 'பெண்களுக்கு சம சம்பளம் வழங்கப்படுவது குடும்பத்திற்கு அதிக வருமானத்தைத்தானே தரும்' என்று நான் ஆண்களைக் கேட்டபோது அவர்கள் சரியாக பதிலளிக்கவில்லை.

கேள்வி- சாதாரணமாக நீங்கள் சந்தித்த மக்கள் தற்போதைய அரசியற் சூழல் பற்றி என்ன கருதுகிறார்கள்? அவர்கள் தங்கள் கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடுகிறார்களா?

பதில்- இவ்வளவு மோசமான துயரங்கள் அவர்களது வாழ்க்கைக் காலத்தில் ஏற்பட்டதில்லை. அதேவேளை இத்துயரங்களை, மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்படும் அநியாயங்களைத் துணிந்து வெளிப்படையாக விமர்சிப்பதற்கு உகந்த சூழலும் இப்போது இல்லை. ஆனால், தங்கள் உணர்வுகளை மக்கள் நகைச்சுவையாக வெளியிடுவதுண்டு. நான் வெளியிலிருந்து வந்தவன் என்ற காரணத்தாலோ என்னவோ என்னிடம் அவர்கள் தாராளமாகக் கருத்து வெளியிட்டனர். பண்டத்தரிப்பில் நான் சந்தித்த ஒரு பெண் 'மலடிகள் பாக்கியவதிகள்' என்று கூறினார். இது தற்போதைய சூழலின் கோரத்தை மிக உயிரோட்டமாக வெளிப்படுத்துகிறது. இதே இடத்தில் இன்னொரு பெண் 'சிங்களவரை ஆதிக்கம் செலுத்த வேணுமெண்டு நாங்கள் விரும்பேல்லை. அதே நேரம் சிங்களவரோ, வேறை ஆருமோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்களிலை ஆதிக்கம் செலுத்திறதும் எமது விருப்பமில்லை' என்றார். மற்றொரு பெண் கூறியவார்த்தை 'சுதந்திரம் என்றால் என்ன? மற்றவர்கள் இருப்பை அங்கீகரிப்பதுதான்' என்பது. இது சாதாரண மக்கள் தங்கள் அனுபவங்களூடாக பெற்றுள்ள அரசியல் முதிர்ச்சியைக் காட்டுகிறது.

கேள்வி- தற்போதுள்ள சூழல் மிகவும் துர்ப்பாக்கியமானது. இந்நிலையில் மக்கள் தேசத்தைப்பற்றியோ, எதிர்காலத்தைப் பற்றியோ நம்பிக்கையை இழந்துள்ளனரா?

பதில்- நிச்சயமாக இல்லை. பொதுவாகத் தற்போது உள்ள சக்திகளில் தமக்கு அதிக தீமைதரும் சக்திகளைப் புறக்கணிக்கிறார்கள். ஆனால் தங்கள் எதிர்காலம் பற்றி உறுதியாக நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். கிளிநொச்சியில் மிகவும் பின்தங்கிய கிராமமான இந்திரபுரத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. 'இந்தக் கேள்வியைக் கேட்கிறது பொருத்தமோ தெரியேல்லை, நாங்களும் இருந்து இந்திரபுரமும் இருந்தால் இதன் அபிவிருத்திபற்றி நாங்கள் யோசிக்க வேணும்' என்று நான் தயக்கத்துடன் கூறியபோது அங்கிருந்த இளம்பெண் ஒருவர் 'நீங்கள் நோர்வேக்குப் போகிடுவியள், நாங்களும் இருப்பம், இந்திரபுரமும் இருக்கும் இதின்ர அபிவிருத்தியும் அவசியமானதுதான்' என்று கூறினார். இந்திரபுரத்திலிருந்து திரும்பி வந்தபோது மீசாலைக்கும் பளைக்கும் இடையில் காவடி ஒன்றுடன் மக்கள் சென்று கொண்டிருந்தனர். இத்தகைய நெருக்கடியான சூழலில் இந்நிகழ்ச்சி மிக ஆச்சரியம் தந்தது. தொடர்ந்து நாங்கள் வடக்கு நோக்கிச் சென்றபோது புன்னாலைக்கட்டுவனிற்கருகே ஈவினையில் தோட்டமொன்றில் ஒரு இளைஞரை இந்தியப் படையினர் துப்பாக்கியால் தாக்கிக் கொண்டிருப்பதையும், வேறொருவர் படையினரால்தாக்கப்பட்டு வாகனத்தில் ஏற்றப்படுவதையும் அயலவர்கள் வேலிகளூடாகப் பார்த்துக் கொண்டிருப்பதையும் நாங்கள் காணநேர்ந்தது. இச்சம்பவம் இந்திய அமைதிகாக்கும் படை அமைதிகாக்கும் பாங்கினை நேரடியாகக் காண எமக்குச் சந்தர்ப்பம் அளித்தது. நாங்கள் பெருமாள் கோயிலுக்குச் சென்றபோது அங்கு ஏராளமானோர் தங்கள் துயரங்களைச் சொல்லி இறைவனை வேண்டிக்கொண்டிருந்தனர். ஒரு தாய் தனது சோகங்களைப் பாடி முறையிட்டுக் கொண்டிருந்தார். இதைப் பார்த்ததும் 'மதம் அடக்கப்படுபவரின் பெருமூச்சு' என்று மாக்ஸ் எங்கோ கூறியது நினைவு வந்தது. இதுதான் இன்றைய யாழ்ப்பாணத்தின் நிலை.

கேள்வி- உங்களை 'வெளியிலிருந்து வந்தவர்' என்ற ரீதியில் மக்கள் பார்த்தார்களா, அல்லது தங்களில் ஒருவராகக் கருதினார்களா?

பதில்- நான் அவர்களின் துயரங்களை அறிய அதிக ஆவல் கொண்டிருந்தமையாலும் எனது இயல்பாலும் அவர்களுடன் பேச்சுவழக்கிலேயே இயல்பாகக் கதைத்தேன். ஒருவகையில் நான் வெளியில் இருந்து வந்தவன் என்பதாலேயே தங்கள் கருத்தைப் பயமின்றி வெளியிட்டார்கள் எனலாம். ஒருதடவை பெண்ணொருவர் 'நீங்கள் ஏழுவருசம் வெளியிலையிருந்து வந்து இப்பவும் நல்லாத் தமிழ் கதைக்கிறியள். சிலபேர் ஒருவருடம் வெளியிலைஇருந்திட்டு வந்து தமிழே மறந்தமாதிரிக் கதைக்கினம். இப்பத்தான் விளங்குது, அவையள் பொய் சொல்லுறவை எண்டு.' என்றார்.

கேள்வி- பல்வேறு காரணங்களாலும் தற்போதுவெளிநாடுகளில் வசிக்கும் இலங்கைத்தமிழர்கள் நாடுதிரும்புவதை அங்குள்ள மக்கள் வரவேற்கிறார்களா?

பதில்- நான் சந்தித்தவர்களின் கருத்துப்படி வெளிநாட்டில் வசிக்கும் தமிழர்கள் நாடு திரும்பிச் சமூகத்தில் ஒரு அந்தஸ்தைத் தேடுவதை அவர்கள் விரும்பவில்லை. தாங்கள் துயரங்களை அநுபவித்து அமைதி

திரும்பும் வேளை துயரங்களை காதால் மட்டுமே கேட்டு அறிந்தவர்கள் அமைதியான சூழலை அந்தஸ்தோடு அனுபவிப்பது நியாயமல்ல எனக்கருதுகிறார்கள்.

கேள்வி- வடபகுதியில் இடத்துக்கிடம் சென்று நண்பர்களைச் சந்தித்துத் திரும்பச் சாத்தியமுண்டா?

www.tamilarangam.net

பதில்– இது கொஞ்சம் சிரமமானது. யாரிடமாவது செல்ல வேண்டுமென்றால் போகுமிடத்திலேயே இரவு தங்கவேண்டியதுதான். இப்படி நண்பர் ஒருவரை நான் சந்தித்த போது, இரவு நீண்டநேரம் நண்பர்களுடன் அரசியல் தொடர்பாகப் பேசிக்கொண்டிருந்தோம். தவிர்க்கமுடியாமல் சிலசமயங்களில் எங்கள் சத்தம் கூடியபோது நண்பரின் பதினைந்துவயது மகன் நடுவில் எழுந்துநின்று 'அமத்தி வாசியுங்கோ, அமத்தி வாசியுங்கோ' என்று எச்சரித்துக் கொண்டிருந்தான். எதையுமே உரக்கப் பேசுவது இன்றைய சூழலில் உசிதமானதல்ல.

கேள்வி– தற்போது வடக்கு–கிழக்கில் இயங்கிவரும் மாகாணசபை வெற்றிகரமாக இயங்கமுடிகிறதா?

பதில்– மாகாணசபை மக்களிடமிருந்து உண்மையாகவே அன்னியப்பட்டுவிட்டது. இந்தியப்படைகள் விலக்கப்பட்டால் அதன் பின்னர் பெரும் மோதல் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில் தன்னை முழுதாக ராணுவமயப்படுத்த மாகாணசபை முயன்றுவருகிறது. ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் பலவந்தமாக ஆயுதப்பயிற்சிக்காகக் கொண்டுசெல்லப்படுகிறார்கள். இவ்வாறு கடத்தப்பட்டோரின் குடும்பங்கள் அனுபவிக்கும் துயரம் மாகாணசபைக்கு எவ்விதத்திலும் ஆதரவைத் தேடித்தரப்போவதில்லை. மாகாணசபையுடன் நெருங்கிய ஒருவரிடம் இதுபற்றி நான் குறிப்பிட்டபோது; அவர் 'இந்நிலைமை கிழக்கில் இல்லை' என்றார். இது ஒருவேளை உண்மையாகவே இருக்கலாம்.

கேள்வி– நீங்கள் சந்தித்த மாகாணசபையின் சார்புள்ளவருடாக மக்களின் அவலங்களை மாகாணசபையின் நேரடிக்கவனத்துக்குக் கொண்டுவர முயற்சித்தீர்களா?

பதில்– அந்த நண்பர் மூலமாக, எனது கருத்துக்கள் தொடர்பாக மாகாணசபையினரை நேரில் சந்திக்கக் குறுகிய அவகாசத்துடன் அழைப்பு விடுக்கப்பட்டது. நான் அந்த அழைப்பை நிராகரித்து எனது கருத்துக்களைத் தெளிவாக விளக்கி இவைபற்றி மாகாணசபையினரிட்குத் தெரியப்படுத்துமாறு அந்த நண்பரிடம் சொன்னேன். ஆனால் மாகாணசபையினர் மக்களின் அவலங்கள்பற்றி அறியாதிருக்க நியாயமில்லை.

கேள்வி– ஏழுவருடங்களின் பின், அன்னிய ராணுவம் ஒன்றின் அடக்குமுறைக்கு ஆளாகியுள்ள தாய்நாட்டில் உங்கள் அனுபவங்கள், குறிப்பாக இந்தியப் படையினருடன், தொண்டர்படையினருடன் எவ்வாறிருந்தன?

பதில்– பலாலியில் தரையிறங்கிய சிறிது நேரத்தில் முதலாவது தடைமுகாமில் எங்கள் கார் நிறுத்தப்பட்டபோது சாரதி இறங்கிச் சென்றார். நான் இறங்க முயற்சிக்காமல் இருப்பதைக் கண்ட சாரதி பின்னர் 'மெதுவாகக் கதவைத் திறந்து இறங்கிறமாதிரிக் காட்டவேணும், அப்படியென்டால் விட்டிடுவாங்கள். இல்லையென்டால் பிரச்சனைப்படுத்துவாங்கள்' என்று எச்சரித்தார். இதைப் பொதுவாக எல்லா இடங்களிலும் செய்யவேண்டியிருந்தது.

வேறு ஒரு சந்தர்ப்பத்தில் மானிப்பாயில் நாங்கள் காரில் சென்று கொண்டிருந்தபோது தொண்டர்படைமுகாம் ஒன்றில் நின்றபோது முகாம்வாசலில் பெரிய கையெழுத்துப் புத்தகம் ஒன்றுடன் மேசை, கதிரை சகிதம் இருந்தவர்கள் 'கையெழுத்து' போடுமாறு வருவோர் போவோரை வற்புறுத்திக் கொண்டிருந்தனர். என்னோடு வந்தவர் கையொப்பமிட்ட பின்னும் நான் கையொப்பமிட மறுத்தேன். 'எதற்காகக் கையொப்பமிடுவதென்று தெரியாமல் நான் இடமாட்டேன்' என்றுகூறி விவாதப்பட அவர்களின் பின் என்னுடன் வந்த நண்பர் 'போடுங்கோ, போடுங்கோ' என்று சைகையால் காட்டினார். ஒருமாதிரியாக சிறிதுநேர இழுபறிக்குப் பின் மிகச்சிக்கலான, விடுபடமுடியாதநிலையில் எனது விருப்பத்திற்கு மாறாக, நிர்ப்பந்தத்தின் பேரிலும், உயிரைக்காப்பதற்காகவும், அமைதிகாக்கும் படை திருப்பியழைக்கப்படக்கூடாது என்று கையொப்பமிட்டேன். இது என்னை மிகவும் துன்புறுத்திய ஒரு சம்பவம். இதன்பின்னர் பண்டத்தரிப்பில் பெண்களைச் சந்தித்து, அவர்களின் துன்பங்களைக் கேட்டபோது எனது துயரம் சிறிதே என்று தோன்றியது. இவைபற்றிக் கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலத் தினசரி ஒன்றுக்குப் பேட்டியளித்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ்ப்பாணம்,
29.06.1989.

ரிய சிநேகி,

உனது பயணத்துக்கு எனது கையசைப்புகள். மறக்க விரும்பாத தை ஆயிரம் இழக்க வேண்டியதை ஞாபகப்படுத்திய உன் பயணம் வெற்றி-யாய் அமையட்டும். வாழ்த்துக்கள் கூறி உன்னை வழியனுப்புமளவுக்கு நான் புராணங்களில் வரும் ரிஷியல்ல. சாதாரண மனிதன்தான். சம்பிரதாயத்துக்காக நானும் எனது வாழ்த்துக்களை.....?

எம்மைச் சந்திக்கவைத்த காலத்தின் நிகழ்வுகளுக்கு நன்றி. தனிமைத் துயரில் தவித்தபோது நட்பு என்பது எவ்வளவு பெறுமதியானது என்-பது அனுபவித்தவர்களுக்கு மட்டுமே புரியும். நண்பர்களை ஒவ்வொன்றாய் இழந்தபோது என் தனிமையுணர்வை உணர முடியாமல் பாதுகாத்த உனக்கு, எனது நண்பிக்கு எனது நன்றிகள்.

கடந்தகால நம்பிக்கையான, அர்த்தம் நிறைந்த அந்த வாழ்-வின் எந்த அம்சமும், எந்தக் கணமும் இலகுவில் மறந்து போகக்கூடியதாக இல்லை. அந்நியனின் காலடித் தடயங்கள் எல்லையற்று, எல்லாவிடங்களிலும் படிந்துள்ளது. நாங்கள் ஒட்டிய சுவரொட்டிகளின் சுவர்களைப் பார்க்கின்-றேன். எல்லாவற்றிலும் ரியூட்டரி, சினிமாப் போஸ்டர்களே நிறைந்துள்ளது. நாங்கள் புரண்டெழும்பிய நல்லூர் வீதிகளின் மணல்வெளிகள் வெறுமையாய்ச் சிரிப்பதைப் போன்ற உணர்வு. அடியே! நாம் சுற்றித் திரிந்த கிராமத்துக் குடிசைகள், வயல்வெளிகள் ஆற்றுநீர் எல்லாமே திட்டித்தீர்ப்பன போலுள்ளன. வெளியில் சிரித்துத் திரிகின்றேன். ஆனால், உள்ளுக்குள் அழாமல், வெட்கப்படா-மல் இருக்க முடியவில்லை.

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலையில் தூக்கி வீசப்பட்டு நினைவுகளை மட்டுமே சுமந்த மனிதர்களாக வாழ்கிறோம். இன்று ஸ்தாபன-ங்கள் தீவிரமான உற்பத்தி(?) நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றன. இதற்கிடையில் நாங்கள் அறுவடை செய்யப்படாமல் தப்பி வாழ்வதென்பது கேள்விக்குறியாகவேயுள்ளது. எல்லோரையும் துரோகிகளாகவும் எதிரிகளாக-வும் பார்க்கும் போக்கு அதிகரித்துள்ளது. சிறிது காலத்தில் ஒருவரை ஒரு-வர் நம்பாமல் பைத்தியம் பிடித்தவர்களாகி விடுவார்கள் போலுள்ளது.

அந்நிய மண், புரியாத மொழி, மறக்கமுடியாத மனிதநேயம் இவற்றுக்கு மத்தியில் நீ எப்படியடி உள்ளாய்? ஜீரணிக்க முடியாத உனது பய-ணம் வெறுமையைத்தான் இங்கு விட்டுச் சென்றுள்ளது. ஆயிரம் ஒற்றை வெற்றிடங்களை விட்டுவைப்பதில்லையே. நீ மீண்டும் வரும்போது(?) எம்மவர் முன்புபோல உயர்மிருந்த பாடல்களையோ அல்லது வீரமிக்க பாடல்களையோ இசைத்துக் கொண்டிருப்பர். நாங்களும் இருந்தால், சந்தித்தால் அவர்கூட சேர்ந்து இசைப்போம். இங்கு எதுவும் மறக்கப்படவில்லை, யாரும் மறக்கப்படவில்லை.

உன் வீட்டு முற்றத்தில் மல்லிகை இப்போதும் பூக்கின்றது. பறி-த்து தர நீ மட்டுந்தான் இல்லை. நீ தருகின்ற பூக்கள் இப்போதும் மணம் கமழ்கின்றது. உன் அதிகாரத்துவ கட்டளைகளை, குழந்தைத்தனமான செயல்களை, ஆளுமையின் அழகையை, கோபமான முகத்தை எப்படி மறப்பது?

நன்றி!

— திவ்ரா —

www.tamilarangam.net

கப்பலில் வேலையென்ற சொல்லு, இங்கை நாங்கள் படுகிறதுகள் ஆருக்குப் புரியும். சீமன் என்றால் ஏதோ கத்தை கத்தையாக வாரிக் கொட்டுறாங்கள் என்ற பேச்சு வேறை. மனிசன் படாதபாடு முழுக்கப்பட்டு, மடையா, முட்டாள் எண்டு வெள்ளைக்காரனிட்டை ஏச்சும் வாங்கி மருந்து குடிக்காத குறை ரோசநரம்பு அறுந்துபோச்சு. எங்கேயோ ஒருத்தனுக்கு கொஞ்சமாவது ரோசமிருந்துதான் கப்ரனுக்கு அடிச்சான், வேலை வாங்கிற போசனுக்கு அடிச்சான், கிடந்த கண்ணாடிச் சாமான்களை ஆத்திரம் தீர அடிச்சுடைச்சான். இந்தக் கேஸ் ஆயிரத்தில, சீ, இலட்சத்தில ஒன்றுதான்.

"எடேய் குமார், வெளிக்கிட்டியா? நீயெடா பொம்பிளையள் மாதிரி - வெளிக்கிடுறதுக்கு ஒரு மணித்தியாலம் வேணும். என்னைப் பார் உனக்குப் பிறகு குளிச்சனான். அதுக்கிடையில வந்திட்டன். நீ என்னடா..."
என் நண்பன் துரை எப்போதும் இப்படித்தான். ஒரு அவசரக்காரன்.

"இல்லைத் துரை, எங்கள் கப்பல் வாழ்க்கையையும், அதுக்கு வெளியிடத்திலயுள்ள மரியாதையையும் நினைச்சுப் பார்த்தன். வறுமை என்கிறது எவ்வளவு கொடிய ஒரு பிரச்சனை பார். அதால ஒவ்வொரு குடும்பங்களிலயும் எவ்வளவு பிரச்சனை பார். இண்டைக்கு நாங்கள் இந்தக் கப்பலில படுகிற கஸ்ரங்களுக்கு காரணம் எங்கட நாட்டின்ர வறுமையும் வீட்டின்ர வறுமையுந்தானே"
"மச்சான் நாய்வேசம் போட்டால் குலைக்கத்தான் வேணும். எப்ப வெளிநாட்டு வேலைக்கு ஆசைப்பட்டு வந்தமோ அதில்பிறகு கக்கூஸ் கழுவு எண்டு சொன்னாலும் கழுவத்தான் வேணும். நாங்கள் என்ன பெரிசா படிச்சுக் கிழிச்சமே? எங்கட படிப்புக்கு ஊரிலயும் வேலையில்லைத்தானே"
என் கப்பல் சினேகிதங்களில் துரையின் போக்குத்தான் எனக்குப் பிடிச்சுக் கொண்டுது. குடும்பக் கஸ்ரத்தினால்- நல்லாகப் பொறுமையை உணர்ந்தவன். ஊரில படிக்க முடியாமல், தோட்டம் செய்ய முடியாமல், வீண் பொழுதுபோக்காமல் கப்பல் வேலைக்கு வந்தவன். அவனை நம்பி இரண்டு தங்கைகள். எனக்கு அவனைவிடப் பொறுப்புகள் கூட. அதனால

சிக்கன விசயத்தில இரண்டுபேருக்கும் நல்ல நெருக்கம்.
இந்தமுறை கப்பல் இத்தாலிக்குப் போய் மாபிள் ஏற்றிக் கொண்டு, சவூதிக்குப் போகுது என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள். அதன்படி இப்போது





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இத்தாலியில். ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டில் இறங்கி களவாய்ப் போய்விடுவோம் என்று இருவரும் நினைப்பதுண்டு. பின் இப்ப இறங்கினல் அகதிக் காம்பில இருந்து, அதன்பிறகு வேலைக்கான அனுமதி எடுத்து, வேலைசெய்ய ஒரு வருசம் செல்லும். காலம் வீணுகப் போகும். கப்பல்ல பல்லைக் கடிச்சு நிண்டால் அந்த ஒரு வருசத்திலும் ஒரு லட்சம் உழைச்சுப் போடலாம் என்று நினைத்து இறங்குவதில்லை.

இறங்கினுலும் ஊர் பார்ப்பதோடு சரி. ஊர் பார்ப்பதெண்டாலும் இருவரும் ஒண்டாய்த்தான் போவோம்.
பியர் மாத்திரந்தான் குடிப்பம். அந்தந்த நாட்டில ஏதாவது விசேசமாய் பார்க்கக் கூடியதாயின் பார்ப்போம். அந்த நாட்டுக் காசு, கொடி என்பன சேர்ப்போம். எப்படா நாடுவரும் என்று கப்பலில் காய்ந்து கொண்டிருப்பவர்கள், நாட்டிற்குள் போனதும் தேடிக் கொள்வார்கள் தற்காலிக இரவுத் துணைவிகளையும், அந்தந்த



# நவீன அகதிகள்

- ந.பார்த்திபன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாட்டுக் குடிவகைகளையும். அவர்களுக்கு நாங்கள் வாழத் தெரியாதவர்கள், அனுபவிக்கத் தெரியாதவர்கள், மொத்தத்தில் கஞ்சர்கள், நப்பிகள். புதுசாய்க் கலியாணம் செய்த ஜோடிகள் மாதிரி எந்த நேரமும் என்னடா இவங்கள் கதைக்கிருங்கள் என்றும், நான் கொஞ்சம் வாட்டசாட்டமாய் இருப்பதால் என்னைப் புருசன் என்றும், துரையைப் பெண்சாதி என்றும் கேலிபண்ணிக் கொள்வார்கள். அதுவே எத்தனைதடவைகள் சொன்னுலும் பெரிய தமாஸ்தான். இயந்திரமாகி, இரும்போடு இரும்பாகி அவர்களின் நகைச்சுவை ரசனையும் குறுகிப்போச்சு. இன்றும் வேலை முடிந்து இருவரும் வெளியில் போகத் தீர்மானித்திருந்தோம். கப்பல் கரைக்கு வந்தால் ஒவ்வொருநாளும் பின்னேரம் வெளியில் போக வசதியிருந்தாலும் - நாங்கள் போவதில்லை வீண்செலவென்று. கப்பலகாரர் நடக்கமாட்டினம். ராக்சியில்தான் போக வேணுமாம். மரியாதையில்லை என்றெல்லாம் பேசி கண்பார்க்குந் தூரம், கூப்பிடு தூரம் எல்லாத்துக்கும் ரக்சிதான். எங்கட நாட்டில வெளிநாட்டவர்க்கு என்று ஒரு விலை சொல்வதுபோல், அதில் பலர் உழைப்பதுபோல், அந்த நாட்டவர்க்கும் நாங்கள் வெளிநாட்டவர்தான். ஆனல், நாங்கள் காசு மெத்தி நாடுசுற்றப்போற சுற்றுலாக்காரர்கள் இல்லையே என்பதை எங்கட கூலிப்படை நினைப்பதில்லையே. ஒவ்வொரு டொலரையும் உயிரைக் கொடுத்து உழைத்து, அநியாயச் செலவுகள் செய்யும்போது, அடிச்சுத் திருத்தமுடியாத வேதனை. விதிவிலக்காக பஸ்சில் போவோரும் உண்டு; எங்களைப் போல்.

நானும் துரையும் நிறையத் தூரம் நடந்து சுற்றியதால், பியர் குடிப்போம் என்று தீர்மானித்து ஒரு ஹோட்டலுக்குள் போனேம். எப்படித்தான் இவங்கள் ஹோட்டலுக்குப் போய் தனிய பியர் குடித்துக் கொள்ளுருங்கள்; எவ்வளவு வெட்கமாயிருக்கும் என்று எங்களோட கப்பலில வேலைசெய்யும் எங்களுர்க்காரர்கள் அடிக்கடி சொல்லி இப்ப எங்களுக்கும் அது வெட்கப்பட வேண்டிய செயலோ, என்ற சந்தேகம்

# நான் தண்டனை கோருகிறேன்

நான்
அழுவதற்கு வரவில்லை - அவர்கள்
விழுந்த இடத்தில்
இன்னும்
உயிரோடு இருப்பவர்களே!
உங்களிடம் பேசத்தான்...
உங்களை நோக்கியும்
என்னை நோக்கியும்
நான்
வேண்டுவது இதுதான்...
இறந்து கிடக்கும்
நம்மவர்கள் பேராலே
கேட்கிறேன்...
தண்டனை அளியுங்கள்!

நமது
தந்தையர் நாட்டு மண்மீது
சிவப்பு ரத்தத்தை
சிதற வைத்தவர்களுக்கு
தண்டனை அளியுங்கள்!

யாருடைய
ஆணையின் பேரில் இந்த
அக்கிரமங்கள் நடந்தனவோ
அந்த துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்!

இந்த சவங்களின்மீது
சிம்மாசனம் ஏறிய
அந்த துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்!

www.tamilarangam.net

மறப்பவர்களுக்கும்
இந்தக் கொடுமைகளை
மன்னிக்கச் சொல்பவர்களுக்கும்
தண்டனை கொடுங்கள்!

நான்
எல்லோருடனும்
கைகுலுக்க விரும்பவில்லை
ரத்தக்கறை படிந்த
கரங்களைத்
தொடுவதற்கே விரும்பவில்லை
நான்
தண்டனை கோருகின்றேன்...!

தூர தேசங்களுக்கு
அவர்களை
தூதுவராய் அனுப்புவதை
அமைதி வரும்வரை
அவர்களை
அறைகளில் அடைப்பதை
நான்
அடியோடு விரும்பவில்லை.

இங்கேயே...
இப்பொழுதே...
திறந்த வெளியிலே
நீதி வழங்குங்கள்!
அவர்களுக்குரிய தண்டனையை
என்
கண் முன்னே
நிறைவேற்றுங்கள்...!

- பாப்லோ நெரூடா -

சிலநேரம்.
"அதில போய் இருப்பம். ஒதுக்கமாய் இருக்கு, வெளிச்சமும் குறைவாய் இருக்கு" என்ற துரை முன்னுக்குப் போய் இருந்த இடத்தில் நானும் அமர்ந்தேன். எங்களிடம் வந்த சர்வரிடம் கெனிக்கன் பியர் இரண்டு கொண்டுவரும்படி கூறிவிட்டு கொறிப்பதற்கு ஒரு கடலைச் சுருளும் எடுத்துக் கொண்டோம்.
"என்ன இண்டைக்கு இதோட சரியோ, இல்லை இன்னும் எடுக்கிறதோ"
துரை முணுமுணுத்தான்.
"போதும் மச்சான். இதை அடிச்சிட்டுப் போவம். பியர் எண்டு சொல்லிப் போட்டு மூன்று போத்தல் குடித்தால் அதிலும் ஒரு வெறி வரும்தானே. அப்ப மற்றக் குடியளைப் பிழையெண்டு ஏன் நாங்கள் சொல்ல வேணும்? எதுவும் வெறிக்கவிடக் கூடாது"
எனக்குக் குடியிலும் ஒரு நிதானம்.
கொஞ்சங் கொஞ்சமாய் கூடி சிலருக்கு இருக்க இடமில்லாமல் நின்று குடிக்கிறுர்கள். எங்கட மேசைக்கும் ஒரு வெள்ளைக்காரர் வந்திருந்தார். எப்படியோ எங்களுக்குள் கதை தொடங்கும் என்று நாங்கள் நினைத்ததால் அவசரமாய் கதை தொடங்கட்டும் என்று பேசாமல் இருந்தோம்.
"நீங்கள் இண்டியாதானே?"
என்று எங்கள் நினைவை சரியாக்கினுர் அந்த வெள்ளையர்.
"இல்லை, நாங்கள் சிறீலங்கா. நீங்கள் எந்த இடம்?"
என்று சம்பிரதாயமாகக் கேட்டோம்.
"நான் ஜேர்மனி. எங்கட நாட்டில நிறைய சிறீலங்கா மக்கள் இருக்கிறுர்கள்; நீங்கள் அறிந்திருப்பீர்கள்தானே"
"ஓம். இங்கேயும் நிறையப்பேர் இருக்கிறுங்கள். எங்கட நாட்டில பிரச்சனை. இருப்பது கஸ்ரம்"
"அப்ப நீங்க இங்க அகதியாக இருக்கிறீங்களோ?"
"சீ, இல்லையில்லை. நாங்கள் கப்பலில வேலை செய்யிறம். இப்ப கப்பல் காபரில நிக்குது."
" நீங்கள்... இங்கே அகதியாய் இருக்கிறவங்க ரமில்ஸ். நீங்க..."
அவருடைய சந்தேகம் எமக்கு விளங்கியது.

www.tamilarangam.net

அகதியும் தமிழனும் பிரிக்கமுடியாத, உலகமறிந்த விசயமாய்ப் போச்சு.
"நாங்களுந் தமிழர்கள்தான். கூட உழைக்கலாமென்பதற்காக கப்பலில் வேலை செய்கிறோம்."
"உங்கட நாட்டில போராட்டம் உங்களுக்காகத்தானே நடக்குது. அப்ப நீங்களெல்லாம் நின்று போராடியிருக்கலாந்தானே? ஜேர்மனியில் இருபதினாயிரம் பேர், பிரான்ஸில், கனடாவில் அமெரிக்காவில், ஹொலண்டில், இங்கிலண்டில... இன்னும் எத்தனை நாடுகளில இருக்கிறீங்க. எல்லாமாக ஒரு இலட்சத்துக்குக் கூடவரும். இவங்க இங்க நிண்டால் எப்படிப் போராடுவது?"
"நல்லகாலம் இந்தியாவை மறந்திட்டான். அதையும் கணக்கிட்டால் மூண்டுலட்சத்தைத் தாண்டும் அகதிகள் தொகை. வீணாகச் சிறீலங்கா எண்டு சொன்னம்"
நானும் துரையும் கதைச்சுக் கொண்டம் எங்கட பாசையில. அதுக்குத் தானே எங்கட பாசை உதவும்.
"என்ன நான் கேட்பது தவறு? அதை நீங்கள் தவறாக விளங்கிக்கொண்டு உங்களை நோகடிக்கக் கூடாது"
நாங்களும் "இல்லையில்லை" என்று தலையாட்டி ஆமோதித்தோம். சரியான ஆட்களைப் பிடிச்சிட்டான்.
"எந்த நாட்டில போராட்டம் இல்லை? பிரச்சனை இல்லை? கொலை, கொள்ளை, கற்பழிப்பு இல்லை? போராட்டம் எண்டால் இதெல்லாம் இருக்கத்தான் செய்யும். உலகம் முழுக்கப் போராட்டம் நடக்குது. ஆனால் அந்தந்த நாட்டுமக்கள் போராடாமல் அகதிகளாய்ப் போகவில்லை. சிறீலங்கன்ஸ் மட்டுந்தான் அகதிகளாக வந்திட்டாங்கள். நீங்கள் உழைக்க வந்தீங்கள், அது நல்லது. அவங்கள். .."
மறுபேச்சுக்கே இடமின்றி, தானே பிரச்சனையையும் சொல்லி, எங்கட பிழையளையும் சொல்லுறரே. எங்கட நாட்டில இருக்க முடியாது என்று ஒரு குற்றப்பத்திரிகையைச் சமர்ப்பிக்க முடியாமல், அதெல்லாம் இருப்பதுதான் போராட்டம் என்கிறானே!
"என்ன இது? உங்களுக்குத் தேவையான உரிமைகளுக்காக நீங்கள் போராடாமல், அந்நிய நாடுகளுக்கு அகதிகளாகப் போறதால, அந்நிய நாடுகள் உங்களுக்காகப் போராடி உங்கட உரிமைகளை எடுத்துத் தருவாங்களா? அது சரியா?"
பியரும் காலியாகி விட்டது. மிகுதியாக கிளாசிலிருந்ததை இருவரும் குடித்தபோது... சர்வரைக் கூப்பிடடவர் "மூன்று பியர் கொண்டு வா" என்ருர். அவர் முதலில் வேறு ஏதோ குடித்துக் கொண்டிருந்தார்.
"இல்லை நன்றி! எங்களுக்குப் போதும். நாங்கள் இருந்து கதைக்கிறோம். ஆனல் எங்களால..."
"பியர்தானே, அதெல்லாம் குடிக்கலாம். மற்றக் குடிமாதிரி இல்லையே பியர். எடுங்கோ...ம்"
"நீங்கள் முதல் குடித்ததையே எடுத்துக் குடியுங்கோ. ஏன் எங்களுக்காக நீங்கள் பியர் குடிக்கிறீங்கள்?"
"பரவாயில்லை. பியர்மட்டும் பழகியவைக்கு மற்றக்குடி குடிக்கக் கஸ்ரந்தான். மற்றக்குடி குடிக்கிறவை பியரும் குடிக்கலாம். அது ஒன்றும் செய்யாது."
"உங்களுக்கொன்றும் செய்யாது. ஆனல் எங்களுக்குக் கஸ்ரமாயிருக்கு. நீங்கள் எங்களுக்காக பியர் குடிக்கிறதுபோல..."
"சரி, அப்படியென்ருல்..."
என்று கூறிக்கொண்டு சர்வரைக் கூப்பிட்டு பியரைக் கொடுத்து, "விஸ்கி கொண்டுவா" என்று கூறியபின், எங்களுக்கு ஒரு திருப்தி. ஏன் எங்களுக்காக அவர் தன் விருப்பத்தை விடவேண்டும்?
"எங்கட மக்களுக்கு முன்பின் போராட்ட அனுபவமில்லை. அதோட இரண்டு இனத்துக்கிடையில நடக்கிறதால எங்கட இனம் சரியாகப் பாதிக்கப் படுகிறது. அதனுல..."
"என்ன அனுபவம்...? பிறக்கேக்கை அனுபவத்தோடையா பிறக்கிறம்? அல்லது போராட்டம் வருமெண்டு முன்னமே படிக்கிறதா? நிலமை மாறியது, போராட்டத் தேவையேற்படுகிறது. போராட்டம் என்ருல் தனியே ஆயுதம் எடுப்பதா? வேறு போராட்டமுறை

www.tamilarangam.net

இல்லையா? அல்லது வேறுவிதமாய்ப் பங்களிப்புச் செய்யவியலாதா? எத்தனை வழியிருக்கு..."

"வேறு வழியில எல்லோரும் செய்யிறதுதான். வெளிநாட்டில இருந்து நிதி அனுப்புவோம்."

"நீங்கள் அனுப்பிற காசில உங்கட பெற்றோர், சகோதரர்கள் வசதியாயிருக்க, நாட்டுக்காகப் போராடுகிறவங்களின்ர பெற்றோர், சகோதரர்கள் கஸ்ரத்தை அனுபவித்தால், போராடத்தான் மனம் வருமா? சீ, நாங்களும் வெளிநாடு போய் நிறைய உழைச்சு அனுப்பி எங்கட பெற்றோரை வாழவைக்கவேணும் என்றுதானே நினைக்கத் தோன்றும்."

"ஏனைய உலகநாடுகளின்ர பொருளாதாரம், வசதி வாய்ப்புகளும், கொள்கைகள், சட்டதிட்டங்கள் உங்களுக்கு சாதகமாகப் போனதாலதான் நீங்கள் உங்கட நாட்டைவிட்டு அந்நிய நாடுகளுக்குத் தஞ்சம் போகின்றீர்கள். சிறீலங்கா படிச்சநாடு. அதிலும் வடக்குத் தமிழர்கள் கெட்டிக்காரர் என்று சொல்லிக் கொண்டு நீங்கள் புத்திசாலித்தனமென்று சோம்பேறிகளாக வெளிநாடுகளுக்கு அகதிகளாக வந்துவிடுவீங்கள். உங்களவிட படிப்புக் குறைஞ்ச பலநாடுகளில போராட்டம் நடந்தும், அகதிகளானது இல்லையென்றுதான் சொல்ல வேணும்."

நானும் நண்பனும் ஆளையாள் பார்த்துக் கொண்டோம். அவர் சொல்லிறது உண்மைதான். எங்கட நாட்டில இருக்கமுடியாத நிலையிருந்தால், ஒருத்தருமே இருக்க முடியாதுதானே. ஆனால் இன்னும் எவ்வளவுபேர் எங்கட

## கறுப்பு இயேசுநாதர்

இயேசுவானவர்
ஒரு கருப்பனுகத் திரும்பி வருவாரானுல்
அது நல்ல தல்ல.

அவர் சென்று பிரார்த்தனை செய்ய முடியாத
தேவாலயங்கள்
இங்கு ஏராளமாய் உள்ளன.
எவ்வளவு புனிதப்படுத்தப் பட்டாலும்
நீக்கிரோக்களுக்கு

அங்கே வாயில்கள் மறுக்கப்படும்.
அங்கே இனம்தான் பெரிதே தவிர
சமயம் அல்ல.

ஆனுல்
இதைமட்டும் உறுதியாகச் சொல்லலாம் -

இயேசுவே!

நீர்
நிச்சயமாக
மீண்டும்
சிலுவையில் அறையப்படுவீர்.

- லாங்ஸ்டன் ஹ்யூக்ஸ் / அமெரிக்கா

நன்றி:— அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்

www.tamilarangam.net


நாட்டில வாழுகினம். வசதியானவர்கள் தங்கட வசதியைப் பார்த்து ஓடிவந்துவிடுவார்கள். அகதியென்ருல் எதுவுமற்றவன். ஆயல் வசதியுள்ளவர்கள் ஒண்டரைலட்சம் செலவழிச்சு கனடா போவார்கள். அவர்கள் என்ன அகதி?

"நண்பர்களே, நான் உங்களை மன்ம்நோகப் பண்ணவேணும் என்பதற்காக இப்படிச் சொல்லவில்லை. இப்ப நிறையநாட்டு செய்திகளில, சஞ்சிகைகளில உங்கட நாட்டுப் பிரச்சனைகளை அறிகிறேன். அதன்பிறகு எனக்கே ஒரு வேதனை. ஏன் எல்லோரும் ஒத்துநின்று போராடாமல், போராட்டத்தைப் பலவீனப்படுத்துகிருர்கள் என்று. மக்களுக்காகப் போராடும்போது மக்களில்லாமல் போவது எவ்வளவு கஸ்ரம் என்பதை ஏன் உணரவில்லை?"

நினைச்சு ஆச்சரியப்படுறன். எங்கட பிரச்சனை, எங்கட நாட்டுப் போராட்டம், எங்களுக்கு வேண்டிய உரிமை, இதுகளைப் பற்றிக் கவலைப்படாமல்;

அக்கறைப்படாமல் நாங்கள் இருக்கிறம். அவர் எத்தனையைச் சிந்திச்சிருக்கிருர். நாங்கள் கிணற்றுத் தவளைகள்தான்"

"எனக்குக் கனடாவிலயிருந்து என்ர சினேகிதர் ஒருத்தர் கடிதம் போட்டிருந்தார். அவருக்கு முப்பது வயசு. அவர்



நாங்கள் கப்பலுக்குத் திரும்பவேண்டியதால், நேரத்தைப் பார்த்தபோது அவரும் அதை உணர்ந்துகொண்டு

"ஓகோ வசதியாயின் நாளை சந்திப்போம். எப்ப உங்கட கப்பல் புறப்படும்?"

என்றும் கேட்டார்.

"தெரியவில்லை. எப்படியும் இன்னும் ஒரு கிழமை நிற்கும். நீங்கள் எங்கட கப்பலுக்கு ஒருக்கால் வாங்கோ. வேறுசில எங்கள் நண்பர்களும் இருக்கிருர்கள். ஓ கே குட்நைற்" என்று சொல்லி விடைபெற்ருேம்.

"என்ன மச்சான் பேசாமல் வாருய்? அவர் சொன்னதில் ஏதாவது பிழையிருக்கோ?"

"இல்லையடா, அதைத்தான் நான்

கனடாவிலயுள்ள அகதிக் காம்பில எங்கட நாட்டுப் பிரச்சனையைச் சொல்லி, தான் அங்கு இருக்க முடியாமல் அகதியாய் வந்தனுன் என்று கூறினுராம். அவங்கள் நீ திருமணமானனீயோ? உனக்குப் பிள்ளைகள் இருக்கோ? என்றெல்லாம் கேட்டிருக்கிருங்கள். இவரும் ஓமென்று சொல்லியிருக்கிருர்."

"ஏன் மச்சான் அதெல்லாம் கேட்டவங்கள்? ஒருவேளை கூப்பிடுறதுக்கோ?"

"அதையேன் கேக்கிருய்; குடுத்தாங்களாம் சரியான பேச்சு. "நீங்களெல்லம் எப்பிடி இங்க வருவியள்? நாட்டில சரியான அநியாயங்கள் நடக்குது எண்டு நீ இங்க வந்தாய். அப்ப உன்ர இளம் மனைவியும்

www.tamilarangam.net

சின்னப் பிள்ளைகளும் எப்படி அங்கை இருக்குங்கள்? அதுகளை விட்டுட்டு நீ ஓடி வந்திட்டாய். அதுகளுக்கு இப்ப யார் பாதுகாப்பு? உண்மையில அதுகள்தான் அகதிகள். இப்ப உன்னை நாங்கள் திருப்பியனுப்புறம். நீ போய் அதுகளையும் கூட்டியா! இல்லையெண்டால் அங்கையே இரு."

"பிறகென்ன நடந்துது? அவரைத் திருப்பி அனுப்பினவங்களோ?"

"சீ சீ, அவர் கெஞ்சி மன்றாடி ரிக்கற் அனுப்பி எல்லாரையும் கூப்பிட்டதுதான். ஆனால் மச்சான், அதுகள் ஊரில தவிக்க இங்க அகதிக் காம்பில குடிச்சிட்டு, சாப்பிட்டு, காட்ஸ் அடிச்சுக் கொண்டிருக்குதுகள். அப்படி எத்தனைபேர் இருக்கினம் தெரியுமே?"

"ஓம், நானும் சிலது கேள்விப்பட்டனான் அகதிக் காம்பில வேலைவெட்டி இல்லாம இருக்கிற சிலர் செய்யிற அநியாயங்கள். அவங்கள் புத்திசாலிகள்; காலாட்டிக் கொண்டிருந்து சாப்பிடுவாங்கள், குடுத்து வைச்சவங்கள்."

இது ஆற்றாமையால் வந்த வசனமோ, இல்லை ஆத்திரத்தால் வந்த வசனமோ, அல்லது இரண்டுந்தானோ என்பது கேள்விக் குறியே.

(யாவும் கற்பனையே)

நன்றி:- வீரகேசரி 19.03.1989

## பவுத்திரம்...மறந்து விடாதே...!

நழுவ விட்டு விடாதே.
பச்சைப் புத்தகத்தை
பவுத்திரப் படுத்திக்கொள்

இல்லையெனில்...,
நீ இழந்து விடுவாய்
நாட்டை இழந்த நீ
பச்சைப் புத்தகத்தை
பவுத்திரப் படுத்தவில்லையெனில்
அகதி என்ற
அங்கீகாரத்தையும்
இழந்து விடுவாய்.

பவுத்திரமாய் இருக்கும் உனது
தன்னுணர்வுகளுடன்
இப்போதைக்கு
பச்சைப் புத்தகத்தையும்
பவுத்திரப் படுத்திக் கொள்

உனக்கு வழங்கப்பட்ட
அகதி இலக்கத்தையும்
மனப்பாடம் செய்து கொள்
ஏனெனில்...,
இங்கே கம்பியூட்டரில்
உனது பெயருடன்
உனது அகதி இலக்கமும்
எழுதப்பட்டுள்ளது.

உனது
பெயரை மறந்தாலும்
அகதி இலக்கத்தை மறக்காதே
மனப் பாடம் செய்துகொள்.

இப்போதைக்கு உனக்கு
தேசிய கீதமாய் இருப்பது
உனது
அகதி இலக்கந்தான்.

- நாடோடி -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆட்டிறைச்சி உட்பட எல்லாவிதமான ஆசிய உணவுப்
பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
நிறுவனம்

**ZAHOOR STORE**

**NORDBYGT. 15,**
**0187 OSLO 1.**

TLF: (02) 19 97 91



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமெரிக்காவின் அட்டகாசம்!




14,700மக்களை மட்டுமே கொண்ட ஒரு சிறு நாட்டால் அந்நாட்டை ஒரு பெரிய ராணுவத் தளமாக்க முனையும் ஒரு வல்லரசின் பொருளாதார அரசியல் நெருக்குதல்களுக்கு எதிராகத் தாக்குப் பிடிக்க முடியுமா?


பிலிப்பைன்ஸிலிருந்து 800கி.மீ. கிழக்கேயுள்ள மைக்கிரொனேசியாவிலுள்ள பாலௌ (        )எனும் தீவு அதன் மூன்றிலொரு பகுதியை அமெரிக்கத்தளம் ஆக்குந் திட்டத்துக்கு எதிராகப் போராட்த் தொடங்கியுள்ளது.

அமெரிக்காவின் எண்ணம்: பிலிப்பைன்சிலுள்ள சுபிக்குடா (SUBI), கிளார்க் (CLARK) ஆகியவற்றை அமெரிக்கா மீளக் கொடுக்கவேண்டிய நாளில் அவற்றுக்குப் பதிலாக ஒருதளத்தைப் பாலௌவில் அமைக்க விரும்புகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமெரிக்கா மறுத்தபோதும் அங்கு திரிடென் அணுவாயுத நீர்மழ்கித் தளமொன்றை அமைக்கும் எண்ணமும் அதற்குண்டு.

பாலெளவில் 1979 இல், அணுவாயுதத்தைத் தடைசெய்யும் ஒரு அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப் பட்டது. ஆனல், சென்ற வருடம் அந்நாட்டு ஜனாதிபதியால் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புத் திருத்தப் பிரேரணையானது, அமெரிக்கா பாலெளவைப் பயன்படுத்த வழிவகை செய்தது. இது 73வீத வாக்காளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதற்கு ஒரு தொகைப் பெண்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அரசியலமைப்பில் ஒரு மாற்றத்தைச் செய்வதற்கு 75வீத வாக்காளர் சம்மதம்தேவை என்ற அரசியலமைப்புச்சட்ட உஷரத்தின் அடிப்படையில் இப்பிரேரணை செல்லாது என அவர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளனர். இதன் தீர்ப்பை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வழக்குத் தொடுநர்களில் ஒருபெண்ணான பேர்னி. கெல்

www.tamilarangam.net

டெர்மன்ஸ்(இரண்டு பிள்ளைகளின் தாய்) ஒஸ்லோவில் நடந்த பெண்கள் மாநாட்டுக்கு வந்திருந்தார். அமெரிக்காவின் அச்சுறுத்தல், வன்முறை, கொலை நடவடிக்கைகளின் விளைவாக ஆண்கள் அதற்குப் பணிந்துபோகத் தொடங்கியுள்ளனர். ஆனல், பெண்கள் மட்டுமே தொடர்ந்து போராடுகின்றனர்.

பெண்களின் பங்கு: பாலௌவின் முதலாவது ஜனாதிபதியும் 1979அரசியலமைப்புச் சட்டத்தில் கர்த்தாவுமான ஹாருவத். றெமலிக் 1985இல் மர்மமான முறையில் கொல்லப்பட்டார். இதற்கு அமெரிக்க உளவுத்தாபனமாகிய சி.ஐ.ஏ. காரணமாயிருக்குமென நம்பப்படுகின்றது. சென்ற வருடம் பேர்ணி. கெல்டெர்மன்ஸின் தந்தையும் கொல்லப்பட்டார்.


"எதிர்காலச் சந்ததியினருக்காக எமது சூழலைத் தூய்மையாகப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். மேலும் தமது நாட்டுப் பத்திரிகைகள் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால் உண்மைநிலையை உலகுக்கு எடுத்துச் சொல்வதும் தங்களது கடமையாகின்றது" என பாலௌவில் அதிகாரத்தில் பெரும் பங்கு வகிக்கும் பெண்களின் பிரதிநிதியான 'பேர்ணி' கூறினர்.

பசுபிக் சமுத்திரத்தில் இன்று 3நாடுகள் அணுவாயுதத் தடையை அமுல்படுத்துகின்றன. முதலாவது 'பாலௌ', பின் சிறிய குடியரசான 'வானௌடு', நியூசிலாந்து.

பாலௌவுக்கு, நியூசிலாந்து பொருளாதார உதவியளிக்க முன்வந்தபோதும், அமெரிக்காவின் பில்லியன் தொகை உதவிக்கே பாலௌ ஜனாதிபதி முக்கியத்துவம் அளித்தார்.

"நாம் எமது மண்ணிலும் கடலிலுமுள்ள வளங்களை அடிப்படையாகக்கொண்டு எமது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். அமெரிக்காவில் தங்கியிருத்தலானது படிப்படியாக எமது சொந்தக் கலாச்சாரத்தையும் மனித விழுமியங்களையும் அழித்துவிடும்" எனவும் 'பேர்ணி' குறிப்பிட்டார்.

நோர்வேயில் பாட்டிமாரின் அணுவாயுத எதிர்ப்பு இயக்கமானது வாரந்தோறும் புதன் கிழமைகளில் நோர்வே பாராளுமன்றத்தின் முன்கூடி எதிர்ப்பை தெரிவிக்கின்றனர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அரிசி வகைகள்
பருப்பு வகைகள்
வாசனைத் திரவியங்கள்
மரக்கறி வகைகள்
பழவகைகள்

*HABIB FOOD A.S*

*Nordbygt. 37B*
*0187 OSLO 1*
*Tel: 68 21 84*

(இரவு 10.00 மணிவரை திறந்திருக்கும்)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுவடுகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?



## வினாக்கொத்து

அன்புமிக்க வாசகர்களுக்கு,

'சுவடுகளி'ன் வளர்ச்சிக்குத் தாங்கள் காட்டிவரும் ஆதரவுக்கு நன்றி. உங்கள் ஆதரவையும் நம்பிக்கையினையும் காப்பாற்றிக் கொள்ள எம்மாலானவரை முயற்சிக்கின்றோம். அதற்கான நடவடிக்கையில் ஒன்றாகவே இவ்வினாக்கொத்து உங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. 'சுவடுகள்' பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை நாம் அறிந்துகொள்வதற்கும், எதிர்காலத்தில் 'சுவடுகள்' எவ்வாறு பதிக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்கும், உங்களின் கருத்துகளை இவ்வினாக்களின் வாயிலாக எதிர்பார்க்கின்றோம். எனவே, கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளித்து எமக்கனுப்பி வைப்பதன்மூலம் 'சுவடுகளின் வளர்ச்சிக்கு உதவுமாறு மிகத்தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

1. எல்லாச் 'சுவடுகளை'யும் வாசித்தீர்களா?

   அ) ஆம்

   ஆ) இல்லை

2. சுவடுகளை வாசித்து முடித்தபின் உங்கள் மனநிலை என்ன?

   அ) முழுத்திருப்தி

   ஆ) ஓரளவு திருப்தி

   இ) எரிச்சல்

   ஈ) ஆத்திரம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3. எதிர்காலத்திலும் சுவடுகளுக்கு ஆதரவளிக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தீர்களா?

அ) ஆம்

ஆ) இல்லை

4. வினா 3இல் உங்கள் பதில் அ) ஆயின், நீங்கள் அந்த முடிவுக்கு வரக்காரணம்?

அ) சுவடுகள் ஒரு வளர்ந்துவரும் சஞ்சிகை என்பதனால்.

ஆ) சுவடுகளின் தரம்.

இ) அ)உம் ஆ)உம்.

5. வினா 3இல் உங்கள் பதில் ஆ) ஆயின் நீங்கள் அந்த முடிவுக்கு வரக்காரணம்?

அ) தரக்குறைவு.

ஆ) விலை.

இ) இந்தமாதிரிச் சஞ்சிகைகள் நமக்கு அவசியமில்லை.

6. 'சுவடுகள்' ஒருபக்கம் சாராத—நடுநிலைவகிக்கும் சஞ்சிகையென்ற கருத்து உங்களுக்குண்டா?

அ) ஆம்.

ஆ) இல்லை.

7. இதுவரை நீங்கள் வாசித்த சுவடுகளில் 'இவை அவசியமில்லை' என்று நீங்கள் கருதும் விடயங்கள் யாவை?

.....................................................................

.....................................................................

.....................................................................

.....................................................................

.....................................................................

.....................................................................

.....................................................................



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

8. 'இந்தமாதிரி விடயங்கள்' சேர்க்கப்பட வேண்டும் என்று நீங்கள் கருதிய விடயங்கள் யாவை?

..................................................

..................................................

..................................................

..................................................

9. இதுவரை நீங்கள் வாசித்த 'சுவடுகளி'ல் உங்களுக்குப் பிடித்தமான விடயங்கள் எவை?

..................................................

..................................................

..................................................

..................................................

..................................................

10. இதுவரை நீங்கள் வாசித்த 'சுவடுகளி'ல் உங்களுக்கு எரிச்சலூட்டிய அல்லது உங்களுக்குப் பிடிக்காத விடயங்கள் எவை?

..................................................

..................................................

..................................................

..................................................

'சுவடுகள்' சம்பந்தமாக எடுக்கப்படும் முடிவுகளில் உங்கள் பதில்களே முக்கிய செல்வாக்கினைச் செலுத்தவிருக்கின்றன. எனவே, உங்கள் பதில்களை முடிந்தளவு விரைவில் அனுப்பிவையுங்கள்.

11. பெண்களைச் சுவடுகள் எந்தளவு பிரதிபலிக்கின்றது?

அ) பூரணமாக

ஆ) ஓரளவு

இ) மிகக் குறைந்தளவு

3/.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# For quality Asian foods

ஆசிய உணவுப் பொருட்கள்

வாசனைத் திரவியங்கள்

ஏனைய நோர்வேஜிய உணவுப் பொருட்கள்

Deta Lavpris

IGBAL BROTHERS

NORBYGATA 54, 0190 OSLO.1.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாற்சந்தி

வயதில் குறைந்த சுவடும்,
அதன் நிறைவான பணியும்.

அன்பான சுவடே,
உன் குறுகிய கால வளர்ச்சியில் ஏனைய தரமான தமிழ் சஞ்சிகைகள் வரிசையில் நீயும் இடம் பிடித்துக் கொண்டாய். வாழ்க உனது பணி. தொடரட்டும் உனது சேவை.

இலமறைகாயாக இருந்த கவிஞர்கள், விமர்சகர்கள், சிறந்த எழுத்தாளர்களை உருவாக்கிய பெருமையும் உன்னையே சாரும்.

கடந்த இதழில் அருணா என்ற சிறுமிக்குக் கைகொடுங்கள் என்ற செய்தியை வெளியிட்டதன் மூலம் தமிழ் மீது மட்டுமல்ல தமிழ் இதயங்கள் மீதும் பற்றுள்ளாய் என்பதை நிரூபித்துள்ளாய். உண்மையிலேயே நீ தமிழ் உலகின் அழிக்க முடியாத வரலாற்றுப் பொக்கிசம்.

ஆர். ஜே. ஆனந்த்,
கெர்மன்ஸ்வெர்க்.


நிர்வாகி,
சுவடுகள்,
நோர்வே.

அன்புடையீர்,
தங்களை எம் 'அன்னை வெளியீட்டகம்' சார்பில் சந்திப்பதில் உவகையுறுகிறோம். இத்துடன் தங்கள் பார்வைக்கு 'அன்னை'யை இணைத்துள்ளோம். அன்புடன் பெற்றுக் கொள்ளவும். தங்களால் முடியுமாயின் நோர்வே, மற்றும் வெளிநாடுகளில் இருக்கும் தங்களது நண்பர்களுக்கும் 'அன்னை'யை அறிமுகம் செய்க. (அனுப்பவேண்டிய முகவரிகளை கலையகத்துக்குத் தந்தால் நாம் தபாலில் அனுப்பி உதவுவோம்)
தங்களது 'சுவடுகள்' பணி செழித்தோங்க 'அன்னை'யின் அன்பான வாழ்த்துக்கள். 'அன்னை'க்குரிய அன்பளிப்பினை விரும்பினால் அனுப்பியுதவுக.

மீண்டுமோர் இனிய சந்திப்பில் சங்கமிக்கும் வரை...

நன்றி!

இவ்வண்ணம்
Editor of Annai
No; 519-G-37
Jayanthi Mawatha
Anurathapura
Sri Lanka
12.05.1989.



# இடைக்கால தீர்வு வேண்டும்!

# ஆறலை் பெயரளவில் ஒரு ஈழம் வேண்டாம்!!

மக்களே, மக்கள் மட்டுமே சரித்திரத்
தைப் படைக்கிறார்கள் என்ற மாவோவி
னது கூற்றின் தாற்பரியம் இன்று மீண்டும்
சீன மக்கள் குடியரசில் பரீட்சார்த்தத்
துக்கு விடப்பட்டுள்ளது. புதிய சரித்திர

ன. புலிகள்–ஐ.பி.கே.எவ். போர்
5000 அப்பாவித் தமிழர்கள், போராளி
கள், பலநூறு இந்தியச் சிப்பாய்கள்
ஆகியோரது இழப்புகள், ஒப்பந்தம்
சார்பான அமைப்புகள் என்று இனங்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போகின்றதோ என்னவோ, எமது மக்கள் மட்டும் என்றும் போலவே சரித்திரத்துக்கு அப்பாற்பட்டவர்களாக, அதே வேளை சரித்திரத்தின் கைதிகளாக எஞ்சிறல் பழைய சரித்திரம் படைக்கும் - சொல்லிக்காட்டும் பண்டிதர்களாகவே இன்றும் விளங்கின்றார்கள்.

கடந்த காலங்களில் அவர்கள் பேரில் அவர்களது பரம விரோதிகளான சிங்கள சோவனிச அரசுடன், குறிப்பாக ஐ.தே.க. அரசாங்கங்களுடன் 'போர்' செய்த விடுதலை அணிகளோ அவர்களை அப்புறப்படுத்தி வைத்தது மட்டுமன்றி, அவர்களது ஆதரவையும் அழிவையும் மட்டுமே பங்கென வர்ணித்து அவர்களது வாழ்க்கைதனை ஏளனமும் செய்தன.

ஐ.தே.க. அரசின் ஏவுதலின்பேரில் நடந்தேறிய வடமாராட்சிப் படுகொலைகளின் பின்னர், தமிழர்களுக்கொரு அமைதியையும் ஒரு தன்மானம்காக்கும் தீர்வையும் பெற்றுத்தருவதாகக் கூறி 60,000தமிழர்களைக் கொன்று குவித்த ஐ.தே.க. அரசுடன் தமிழர்கள் பெயரில் ஒப்பந்தம் செய்தது இந்திய அரசு. அன்றைய காலங்களில் இந்திய அதிகாரிகள் விடுதலை அமைப்புகளிலும் பார்க்க இந்தியக் கொடிக்கே வடக்குக் கிழக்கில் கூடிய ஆதரவுண்டு என்று மார்தட்டி வெருட்டுவது வழக்கம்.

இன்றோ காலங்கள் மாற்றம் கண்டுவிட்ட படுகொலைகள், அவர்களது வட-கிழக்கு அரசேற்பு, புதிய ஜனாதிபதி- புதிய அரசாங்கம் என்ற போர்வையில் சிங்கள சோவனிசம்- ஐக்கியதேசியக் கட்சி என்பவற்றின் பழைய நடவடிக்கைகள், அமைதிப்படையின் கட்டுமீறிய அத்துமீறல்கள்-அடாவடித்தனங்கள், 'பாதுகாப்புப் பிரச்சனைகள்' அற்றுப்போய்விட்ட நிலையில் இந்தியாவினது சிறீலங்கா குறித்த எதேச்சாதிகாரப் போக்கு என்பவை எமது மத்தியிலும் பெரும் குழப்பத்தையே கொண்டு வந்து சேர்த்துள்ளது. நண்பன் யார், எதிரி யார் என்ற புதிய பிணக்கு ஏற்பட்டுள்ளது.

வெறும் சம்பவங்களை மட்டுங் கொண்டு, அதனால் எழும் உணர்ச்சிவசத்தின் போக்கின் நிமித்தம் எமது மக்களது வரலாற்றின் திசையையும் உள்ளடக்கத்தினையும் நிர்மாணம் செய்துகொள்ளும் வழக்கத்துக்கும் நியதிக்கும் ஒரு முடிவில்லை என்றே தோன்றுகின்றது. வெற்றிகள், தோல்விகள், ஏமாற்றங்கள், சதிகள், துரோகங்கள், நேர்மையான நிலைப்பாடுகள், படுகொலைகள், அழிவுகள் எல்லாவற்றினூடாகவும் எமது மக்களைக் கொண்டிழுத்துச் சென்ற ஈழப் போராட்டத் தலைமைகளோ தேர்ச்சிபெற்று முதிர்ச்சி கண்டதாகவில்லை. மாறாக, பழிவாங்கல், சுயநலம் என்ற கீழ்த்தரமான உணர்வுகளுடன் ஒட்டிய அடித்தளக் கோட்பாடுகளைக் கொண்டே முடிவுகளை நோக்கும் மூர்க்கத்தனங் கொண்ட சிறுபிள்ளைகளாகவே காணப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுகின்றன. இவ்வகைத் தர்க்கம் ஏற்று தம்மைக் கன்னைபிரித்துக் கொள்ள மறுக்கும் எவரும் சகல தரப்பினராலும் முரண்பாடான நேரெதிரான, குற்றச்சாட்டுகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர், மௌனமாக்கப்படுகின்றனர். 'இது அல்லது அது' என்ற நியாயத்

# ர. சுந்தரம்

தினூடாகவே அணுகப்படும்போது சாதாரண மக்கள் வக்கு வழியற்று தடுமாறித் தவிப்பது எதிர்பார்க்கக் கூடியதே.

தெட்டந் தெட்டமாக உருவாகிவந்த கடந்த சில வருடங்களில் வேகமும்கண்டு தற்போது, ஈழப்போராட்டமானது தடங்கி முடங்கி திசை கெட்டுப்போய் இருப்பினும், அதனது முன்னோடிகளும், முன்னால் ஓடுபவர்களும், அறிஞர்களும், அமைப்புகளும் ஒன்றுபட்டுக் காணும் ஒரு உண்மையுண்டு. அது ஈழம் என்ற முடிவைத் தவிர்ந்த எந்தவொரு தீர்வும் தமிழர்களது சுபீட்சத்தையும், நிரந்தரமான அமைதியையும் அறுதி செய்திடப் போவதில்லை என்பதாகும். எந்தவொரு தமிழ் விடுதலை அமைப்பும் தமது இறுதி முடிவுகளில் ஒன்றாக ஈழம் அமைய முடியாது என்று முடிவு செய்யவில்லை. அதற்கக் காரணம் கண்மூடித்தனமான நடைமுறைச் சாத்தியமற்ற இலட்சியமல்ல. சிங்கள மக்களது பிரதிநிதிகளாகப் பிரேரித்துக் கொள்ளும் எந்தவொரு அமைப்

தலின்போது முன்வைத்த தனது திட்டங்களில் இருந்து பொதுத்தேர்தலின் போது பின்வாங்கிவிட்டன. சிங்களமக்களோ வரலாற்றில் என்றுமில்லாதவாறு முற்போக்குச் சக்திகளை ஓரளவு அடையாளம்காணக்கூடிய சக்திகளை நிராகரித்து நிர்மூலம் செய்துள்ளனர். ஜே.வி.பி. என்ற தீவிரவாத அணியோ மாநில

அரசாங்கத்தூடாக தமிழர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் தாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்றும், இலங்கை முழுவதையுமே ஒரு சோசலிசக் குடியரசாக ஏற்படுத்துவதன் மூலம் தமிழர்களது பிரச்சனை தீர்த்துவிடும் எனப் பாசாங்கு செய்கிறது. இந்தியப் படையினரின் நேரடித் தலையீட்டினால் முடக்கப்பட்டு தாக்கம் கண்டுவிட்ட சிங்களச் சோவனிசம் பல்முகங்களில் வடிவெடுத்துவர முனைந்தவண்ணம் உள்ளது.

இவர்கள்யாவரதும் முதலைக்கண்ணீர் தமிழர் பற்றியதல்ல என்பதை சிந்தனை கொண்ட எவனும் உணர்ந்துகொள்வான். ஆனால் எம்மைப்பற்றி கருத்திற்கொள்ளும் போது அவர்கள் மூன்று விடயங்களை கவனத்தில்கொண்டுள்ளனர். 1, எமது கடந்தகட்ட போரட்டத்தினூடாக எமக்கு ஏற்படுத்திக்கொண்டுள்ள இராணுவ, மனோவியல் தெம்பு. 2. சுயநலம் கருதியோ நட்புக்காகவோ தமிழர்கள் பேரில் இந்தியாவின் அக்கறை. 3. ஈழம் கோரிக்கையில் பரவலான தளராத நம்பிக்கை, வேட்க்கை. இவையாவுமே சிங்கள சோவனிசவாதிகளுக்கு சகித்துக்கொள்ள முடியாதவையாகவும், அவை முன்றிடையேயுமான பிணைப்போ தொடர்போ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்வைக்க மறுப்பதே முக்கிய காரணமாகும். இந்தியா குறித்தான அமைப்புக்களின் நிலைப்பாடுகளிடையே எழுந்துள்ள முரண்பாடுகளை தமக்குச் சாதகமாகப் பாவித்துக்கொள்ளும் ஒரே நோக்குடனேயே தமிழர்களுக்கான அறிவுரைகளையும் உதவிகளையும் வழங்கிட முன்வருவன யாவும் முனைகின்றன. 13ம் சரத்தினூடாக வழங்கப்பட்டிருக்கும் வடக்கு-கிழக்கிற்கான அதிகாரங்களைக்கூட பேரம் பேசியபடியே சிறிது சிறிதாக வழங்கிட முனைகிறது சிறீலங்கா அரசு. முற்போக்குச் சக்திகளின் கூட்டு முன்னனிகூட ஜனாதிபதித் தேர்




ஆகவே தான பழைய ஐனதபது ஜெ.ஆர். ஆயினும் சரி, புரட்சிவாதியெனக் கூறிக்கொள்ளும் விஜயவீராவாயினும் சரி, புதிய ஜனாதிபதி திரு. பிரேமதாசாவாயினும் சரி தத்தமது நிலமைக்கேற்ப மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களையும் கட்டுக்குள் கொண்டுவரவே முனைவர். இதற்கு அவர்கள் வெவ்வேறு முரண்பாடான சித்தாந்த வாதங்களையும் திட்டங்களையும் காரணமாகக் கொள்ளக்கூடும். அவற்றினிடையே எமது மக்களிடையேயும் விடுதலை அமைப்புகளிடையேயும் இந்தியாபால் ஏற்பட்டுள்ள ஏமாற்றத்தினலும் கசப்புமனப்பான்மைகளாலும் எழுந்துள்ள குழப்ப நிலமையை சாதகமாகப் பாவித்துக்கொள்வதற்கான சூழ்ச்சியின் பொருட்டு 'இந்திய எதிர்ப்பு வாதம்' கொண்ட கோசங்கள் தாறுமாறாக இவையேடி இருக்குமேயன்றி நம்பிக்கை எதும் தரா. இவர்களது செயல்களும் சிந்தனைகளும் சிங்கள சோவனிசத்தின் புதிய வடிவங்களையும் சிறப்புப்பெற்று வளர்ச்சி கண்டால் சிங்களத் தேசியவாதத்தினையும் குறித்து நிக்குமேயன்றி இலங்கைவாழ் தமிழ் மக்களையும் உள்ளடக்கிய, சேர்த்துக்கொண்ட சிறிலங்கா-தேசியவாதத்தினை வளர்த்தெடுக்க முயலா. அண்மையில் திரு. பிரேமதாசாவை சந்தித்த வடக்கு- கிழக்கு பா.உ. குழு சகல தமிழ் கைதிகளையும் விடுதலை செய்யுமாறு கேட்டபோது "ஜெயிலுக்குள் இருந்தால் என்ன வெளியில் இருந்தால் என்ன? ஒரு வழியில் பார்த்தால் நாம் யாவரும் இந்தியாவின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைதிகள்தானே? நீங்கள் உள்ளே இல்லை என்ற உணர்வுடன் சந்தோசமாகப் போய் வாருங்கள்." என்றாராம். மேற்படி கூற்று எவ்வகை நோக்குடன் கூறப்பட்டது என்பதை அங்கும் இங்கும் பறந்து திரியும் வண்டுகளாம் எமது போலி அரசியல் பண்டிதர்களுக்கு விட்டுவிடுவோம். ஆனால் எபிடையே இவர்கள் "பிரேமதாசா கொஞ்சம் நல்லவரும், தமிழரிட்கு ஏதாவது தீர்வு தர முன்வருவாராம்" என்ற போக்கில் பிகற்றலை முன்வைக்கும் போதுமட்டும் மிகவும் நிதானமாக "உங்கள் ஆழ்ந்த அறிவுக்கும் கணிப்பீட்டுக்கும் எமது மனமார்ந்த நன்றி. ஆனால் எம்மை விட்டுவிடுங்கள்" என்று கூறி விலகிச் சென்றுவிட வேண்டிய கடமை ஒன்று எமது மக்களது விடிவின் பொருட்டு விசுவாசத்துடன் வாழும் சகலர்க்குமுண்டு. எனவே நிலமைகள் எதிர்பார்க்கக்கூடிய விதத்திலிருந்து மாறுபட்டு பாரிய வேற்றுமைகளைக் காட்டினலன்றி ஈழம் என்ற தீர்வே எமது மக்களிற்கு ஒரு நிதந்தர தீர்வை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது என்பது நன்கு புலனுகின்றது.

இவ்விடயத்தில்மட்டுமின்றி இன்றைய காலகட்டத்தில் தமிழரிட்கு ஒரு இடைக்காலத்தீர்வு வேண்டும் என்ற கணிப்பீட்டிலும் சகல விடுதலை அமைப்புகளிடையேயும் கருத்தொற்றுமை உண்டு. 'மாநில அரசாங்கமும்' புலிகள் ஈரோஸ் அமைப்புக்களின் பேச்சுவார்த்தைகளும் (சிறீலங்காவுடன்) அதற்கு சான்று பகர்கின்றன. இந்த உண்மையை ஒத்துக்

தகாலகட்டப் போராட்டத்தில் எமது மக்களிடையே உள்ள முரண்பாடுகளை ஏற்று வேலைத்திட்டங்களை முன்வையாது அவற்றை அடாத்தான நியாயங்களால் அதர்மத்துடன் தட்டிக்கழித்து, சந்தர்ப்பவாதப் போக்கில் சமயங்களில் அவற்றினை தத்தமது அமைப்புக்களுக்கு சாதகமாகப்பாவித்துவிடலாம் என்ற எண்ணப்பாங்கில் கடமையாற்றிய எமது அமைப்புக்களின் குட்டிபூர்சுவா தலைமைப்பீடங்கள் இன்றும் தான் காலம் தாழ்த்தியாவது பிராயச்சித்தம் தேடும் நோக்கம் கொண்டவர்களாக இல்லை, ஜனநாயகரீதியில்தத்தமது அமைப்புக்களைச் சீர்செய்து குட்டிபூர்சுவா ஆதிக்கத்தின் பிடியை சிறிது சிறிதாகவாயினும் இளகவைக்கும் சுயமுயற்சிகளும் இல்லை. பெரிய கம்பனிகளின் அதிகாரிகள் போலவே அமைப்புகளைப் பராமரிக்கும் இவர்கள் இடைக்காலத்தீர்வு என்பது பற்றி குழப்பமடைந்து அதனையே நிரந்தரத் தீர்வாக மனதிற்கொண்டு காரியமாற்ற முனைவதால், இடைக்காலத்தீர்வு என்ன என்ற கேள்வியைவிட அதனையார் கொண்டு நடத்துவது—அதாவது யார் அதன் அதிகாரத்தைப்பிடித்துக் கொள்வது என்ற கேள்வியே முக்கியமானதாகின்றது. இப்போட்டியின் விளைவு இறுதியாக அவ் இடைக்காலத் தீர்வுக்கு யார் ஈழம் என்ற பெயரைப் பெற்றுத் தருவது என்ற சின்னத்தனமாகவே திகழப்போகின்றது என்ற பலரது மனச்சஞ்சலம் நியாயமானதாகவே படுகின்றது. திராவிடப் பேராட்சி கோரி நின்றவர்கள் எப்படி தமிழ்நாடு என்ற பெயரைப் பேரம்பேசிப் பெற்றபின் மனமாறிக்கொண்டனர். அதனைப் பாரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்கள் தம்மையும் த.வி.கூ.இனரைப்போலவே கணித்துவிடுவர், என்ற பிழையான அரசியற் கணிப்பீடுகளால் "நாம் ஈழம் தவிர்ந்த எதனையும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. ஆனல் நிர்ப்பந்தங்களாலே இடைக்கால அரசாங்கத்தை ஏ.றறுக் கொள்கிறோம்..அல்லது மாநில அரசாங்கம் நடத்தப்போகிறோம்" என்று இடைக்காலத்தீர்வை ஏற்றுக்கொள்வதற்கான தேவைகளையும் அவசியங்களையும் வலியுறுத்த முனையாது, அதனை உருவாக்கித்தந்த யதார்த்த நிலமைகள்பால் மட்டுமே கவனத்தையும் முயற்சிகளையும் திருப்பியது எமது மக்களது போராட்டகால வாழ்க்கையில் விரையமான வேளையே. இவற்றிற்கெல்லாம் ஓரளவு மனச்சாந்தி பெற்றுத்தர வந்து சேர்ந்தது பொதுத் தேர்தல். த.வி.கூ.இனரது சுண்ணக் கிரிகை இறுதியாக ஒப்பேற்றிவைக்கப்பட்டது. ஒப்பந்தம்,இ.அ.கா.படை குறித்த அதிருப்திகளும் நன்கு எடுத்தியம்பப்பட்டது. இடைக்காலத்தீர்வு ஒன்றுக்கு தமிழர்களுக்கு உரிமையுமுண்டு, அதன்பால்விருப்பமும் உண்டு, என்பவை ஊர்ஜிதமும் செய்யப்பட்டன.

அப்படியாயின் அடுத்த கேள்வி அத்தீர்வு எப்படியாக அமையவேண்டுமென்பதேயாகும்.

மக்களது வேண்டுகோளுக்கும் எதிர்காலப் போராட்டத்திற்குத் உகந்தவாறு மேற்படி கேள்விக்கான பதிலைத் தேடும் விசுவாசமான முயற்சி இல்லாதுள்ளது. கடந்த ... எமக்கு உதவட்டும்.

எமது இன்றய இக்கட்டான அரசியற் தேக்க நிலைக்கு அடித்தளக் காரணம் இன்றும் எமது அமைப்புக்கள் புறக்காரணிகள் மட்டிலுமே தங்கி போராட்டத்தைக் கொண்டு செல்ல முனைவதேயாகும். 'எனது எதிரியின் எதிரி நன்பன்' என்ற கோட்பாட்டில் அமைந்த வாதத்தினைத் தாங்கிச்செல்லும் போது நிலமைகள் மேலும் சீர்கெட்டுப்போய்விடுகிறது. அதனல் ஜனநாயகம்,துரோகி, தேசபக்தன் என்ற பதங்கள் எதுவித நேர்மையான உள்ளடக்கங்களுமற்று விருப்புக்கேற்றவாறு யாரும் எப்போதும் பிரயோகித்துக் கொள்ளக்கூடிய வெறும் உனர்ச்சிப்படுத்தும் பதங்களாகவே பாவனைக்கு விடப்பட்டுள்ளன. அதேவேளை மனிதஉயிர்களோ சகல மரியாதையுமற்று,பொருளுமற்று துஸ்பிரயோகத்திற்கு உகந்த பண்டங்களாக மாற்றப்பட்டுள்ளன.

எனவே,ஆயுதங்களுக்கு இழந்துவிட்ட உரிமைகளை மீட்டுக்கொள்ளவும்,கருத்தொற்றுமை கண்டு இடைக்காலத்தீர்வினைநிர்ணயம் செய்யமுடியாத நிலை நிலையிலுள்ள அமைப்புகளிடமிருந்து அதற்கான அதிகாரப் பொறுப்பினை பெற்றுக் கொள்ளவும் மக்களைப் போராட்டத்தின் முன் அரங்கில் கொண்டுவந்து சேர்ப்பதே எமது மக்களது சுபீட்சமான எதிர்காலத்துக்காக வாழ்வை அர்ப்பணித்துள்ள ஒவ்வொரு மானுடனதும் கடமையாகிறது.அதுவரையில் இடைக்காலத்தீர்வு என்பதும் ஒரு பகற் கனவாகத்தான் தோன்றுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவடுகள்

ஜூன் 26.

* ரெலோ இயக்கப் பிரமுகர் ஒருவரிட்குத் திருச்சி விமானநிலையத்தில் தரையிறங்க அனுமதி மறுப்பு.

* போதைப் பொருளுடன் மூன்று இலங்கையர் சென்னையில் கைது.

* நெல்லியடியில் மூன்று ஈரோஸ் உறுப்பினர் கடத்தல்.

* கண்டிமாவட்ட பா.உ. அஜரா டானியல் சுட்டுக்கொலை.

* தமிழ்ப்பகுதிகளில் தமிழர்களைப் பாதுகாக்கவும், அமைதியை நிலைநாட்டவும் மாற்றுவழி கண்டபின்பே இந்தியப்படை வெளியேறும் என உள்த்துறை இணை அமைச்சர் சிதம்பரம் அறிவிப்பு.

* எல்லா சமூகங்களுக்கும் வெளித்தலையீடின்றி நியாயமான தீர்வொன்றை உருவாக்க நேரம் வந்துள்ளது' என விடுதலைப்புலிகள் கூறியதாக, அரசு அறிக்கை.

* இயக்க மோதல்களால் போராளிகளை அழிக்கும் பேரினவாத சூழ்ச்சிக்கோ, ஆசியாவில் தேசிய விமோசன இயக்க அணிசேரா இயக்கக் கோட்டையை சீர்குலைத்து இந்துசமுத்திரத்தில் ஆதிக்கம் நிறுவும் ஏகாதிபத்தியச் சதிகளுக்கோ, இரையாகாது இயக்கங்கள் விழிப்புடனும், நிதானத்துடனுமிருப்பது அவசியமென இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அறிக்கை.

ஜூன் 27.

* படைவிலகல் சர்ச்சையால் 'சார்க்' வெளிநாட்டமைச்சர்கள் மகாநாட்டை இலங்கை புறக்கணிப்பு.

ஜூலை 3

* படைவிலக்கல் தொடர்பாக இரு அரசுகளும் பேச்சுநடத்தவேண்டும் என இலங்கைக கம்.கட்சி கோரிக்கை.

ஜூலை 4

* விகிதாசார ரீதியில் வானொலி, தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகள் இடம்பெற ஆவன செய்யப்படும் என ராஜாங்க அமைச்சர் அறிவிப்பு.

ஜூலை

* முன்னாள் சோவியத் ஜனதிபதி க்ரோமிகோ காலமானார்.

* ஈழத்தமிழர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டபின்பே இந்தியப்படை திரும்பவேண்டும் என தி.மு.க. பொதுக்குழு தீர்மானம்.

ஜூலை 5

எம்மைத்தட்டிக் கேட்கும் அதிகாரம் உலகில் எந்தவொரு சக்திக்கும் இல்லை, விடுதலைப்

ஜூலை 10

* நாட்டுக் கூத்து முன்னோடி நடிகமணி வி.வி. வைரமுத்து காலமானார்.

* போதைப் பொருள் விற்பனைக்காக ஏழு இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தில் கைதாகினர்.

ஜூலை 11

* தமிழ் பகுதிகளுக்கு அதிகாரம் வழங்கப்படும் வரை இந்தியப் படை வெளியேறாது என இந்திய அதிகாரிகள் கருத்து.

* தமது 12 உறுப்பினர்களை மூன்று தினங்களாகக் காணவில்லை என ஈரோஸ் அறிவிப்பு.

ஜூலை 12

வடக்கு, கிழக்கு சூழ்நிலையால் வெளியேறும் இளைஞர்கள் தங்க கொழும்பு இந்துக் கல்லூரியில் முகாம் அமைப்பு.

ஜூலை 13.

* பாதுகாப்புக் காரணமாக வட-கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிப் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளது.

ஜூலை 14.

* பருத்தித்துறையில் புலி-இந்தியப்படை மோதலில் 6பேர் பலியாகியுள்ளனர். விளானுக்கும், இளவாலைக்குமிடையில் மேலும் ஒரு மோதல் இடம்பெற்றுள்ளது.

* த.வி.கூ. உறுப்பினர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் இனந் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

www.tamilarangam.net

ஜுன் 28.

* அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி, மாகாணசபையைக் கலைத்து முதலமைச்சரையும், அமைச்சர்களையும் கைதாக்க புலிகளும், அரசும் சதி செய்வதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். குற்றம்சாட்டியது.

* பகைமைகளை முடிவுக்குக் கொண்டுவருவதாயும், பிரச்சனைகளைப் பேசி த்தீர்ப்பதாயும் புலிகள்-அரசு கூட்டறிக்கை.

* வத்தளைப் பொலிசாரால் கைதான இரு தமிழ் இளைஞர் கொல்லப்பட்டது தொடர்பாக புளொட் கண்டனம்.

ஜுன் 30.

* 'மக்களின் எதிர்ப்பிற்கு மத்தியிலும் இந்தியா படைகளை விலக்காவிடில் அவற்றை நாட்டைவிட்டு வெளியேற்ற நாம் தயார்' என ராஜாங்க அமைச்சர் ஏ.ஜே.ரணசிங்க அறிவிப்பு.

ஜுலை 1

* அரசு, புலிகள் உடன்பாடு இந்தியப் படையைமீளப்பெற வழிவகுக்காது என புதுடில்லி அதிகாரிகள்கருத்துத் தெரிவிப்பு.

* புலிகள் மீது தாக்குதல் நடத்தக் கூடாது என பிரேமதாசா ராஜீவிடம் கோரியிருப்பதாக இலங்கை அரசு அறிவிப்பு.

ஜுலை 2

* இந்தியப்பொருள் பகிஸ்கரிப்பு மலையக மக்களுக்கு எதிராக திசைதிருப்பப்படலாம் என்று மலையக மக்கள் முன்னணி அச்சம் தெரிவிப்பு.

புலிகளுக்கு பலமான அமைப்பு உண்டு என பிரேமதாசா கூற்று.

ஜுலை 6

* இந்தியப் படை வெளியேற்றம் தொடர்பாக இருநாடுகளும் கூடி முடிவெடுப்பதே சிறந்ததென மேல் மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் ஒளி குணசேகரா கூற்று.

* அரசு-புலிகள் பேச்சைத் தாம் வரவேற்பதாகவும், பேசவேண்டியோர் இல்லை இருப்பதால் அவர்களையும் அழைத்துப் பேசாவிடில் இரத்தக்களரி ஏற்படுமெனவும் திவ்வியநாதன் பா.உ. கருத்துத் தெரிவிப்பு.

* வடக்கு-கிழக்கு இணைப்பு சர்வஜன வாக்கெடுப்பு 1990 ஜனவரி29 வரை பிற்போடப்பட்டுள்ளது.

ஜுலை 7

* இலங்கையில் செய்தித் தணிக்கை அமுலாகியது.

*** ஈரோஸ் பா.உ.க்கள் பாராளுமன்றம் செல்வதெனத் தீர்மானம்.

* இந்தியப் பிரதிநிதி ஒருவர் அனுப்பப்பட்டால் பேசத்தயார் என ராஜாங்க அமைச்சர் அறிவிப்பு.

ஜுலை 8

* இலங்கை மக்களின் பாதுகாப்பு, எமக்கே உண்டு, இந்தியாவுக்கல்ல இந்தியா வெளியேறினால் புலிகள் ஆயுதங்களைக் கீழே போடுவதை உறுதி செய்வேன் என ஜனாதிபதி பிரேமதாசா அறிவிப்பு.

* இந்தியப் படை வெளியேறும்வரை "சார்க்" மாநாடு நடைபெறாது என ரஞ்சன் விஜேரத்ன அறிவிப்பு.

ஜுலை 15.

* இளவாலையில் நடந்த மோதலின்பின் 12 வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன.

* ஒப்பந்தநடைமுறை, படைவிலகல் தொடர்பாக இலங்கையுடன் பேச்சுவார்த்தை தொடங்க இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது.

ஜுலை 17.

* த.வி.கூ. தலைவர்கள் கொலை தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை நடத்த வேண்டுமென எதிர்க்கட்சிகள் கேட்டுள்ளன.

ஜுலை 19.

* புளொட் தலைவர் உமாமகேஸ்வரன் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

* இலங்கையிலிருந்து அமைதிப்படை விலகிக் கொள்வது தொடர்பான விவகாரத்தில் இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டையே தமிழ்நாடு அரசும் ஆதரிக்குமென தமிழ்நாடு முதல்வர் தெரிவித்துள்ளார்.

ஜுலை 20.

* கடந்தகால அசம்பாவிதங்களின் போது சேதமடைந்த கொழும்பு-காங்கேசன்துறை புகையிரத வீதி திருத்தியமைக்கப்படுகிறது.

* யாழ் பல்கலைக்கழகத்தின் ஆய்வு கூடத்திற்கு பிரிட்டனிலிருந்து 25மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள் அன்பளிப்பு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



## நரையர் பார்வையில்...

## நாட்டு நடப்புகள்.

*பத்து வருடங்களாக நோர்வேயில் இயங்கி வரும் தமிழ்ச்சங்கம் கோடை விடுமுறையில் கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தியது. அந்தப் போட்டியில் அதிகம் சிங்களவர்களைக் கொண்டகாரணத்தால் குழுவொன்று விலக்கப்பட்டது. இக் குழு விலக்கப்பட்டதைக் கண்டித்து வேறு ஐந்து குழுக்கள் தாம் போட்டியிலிருந்து விலகின. இச்சம்பவம் பலருக்கு உண்மையில் கவலையையே கொடுத்திருக்கும். சங்க விதிகள் வேறு குழுக்கள் கலந்துகொள்வதைத் தடுக்கக் கூடும், ஆனால் சிங்களவர்களைக் கொண்ட குழு அனுமதிக்கப்பட்டிருந்தால் அது சங்கத்தின் பெரும் தன்மையைக் காட்டியிருக்கும். நாட்டைவிட்டு வெளியே வந்த பின்பாதல் நட்புறவைப் பேணி ...

ந்த படமொன்றுஎன்னை மிகவும் கவர்ந்தது. அப்படியொன்றும் அதில் விசேடமாக இருப்பதாக யோசிக்காதீர்கள். கொஞ்சப்பேர் கையை உயர்த்தியபடி நடக்கும் படமே அது. இதைப் போய் பாராட்டுகிறேனே என்கிறீர்களா? விசயம் இருக்கிறது. மேற்கு வங்கத்தில் அடிதடிகள் மிகச்சாதாரணம். முக்கியமாக அரசியற்கட்சிகள் வீதியிலறங்கித் தங்களிடையே பலப்பரீட்சை நடாத்துவதுதான் இதற்கு முக்கிய காரணம். ஒன்றுமறியாத பல அப்பாவி கள் இவ்வாறான சண்டைகளில் அநியாயமாக உயிர்துறப்பதைக் கண்டு இப்பிரச்சனைக்கு ஒரு மாற்று வழி தேடினர். மக்கள் தடியடியில்இறங்காது உயிர்பிழைக்க வேண்டுமென்றால் வீதியில் சண்டை நடக்கும் போது கையை உயர்த்திக்கொண்டு போகவேண்டும். அப்படிப் போனால் நான் எந்தக் கட்சியையும் சேராதவன் என்று பொருள். (ஒரு கை இவர்களுக்கு நிரந்தரமாகவே உயர்ந்திருக்குமோ என்னவோ) இலங்கையில் இப்படி ஏதாவது மாற்றுவழிகளைக் கண்டுபிடிக்கச் சாத்தியமுண்டா?

** 'தரையிறங்க அனுமதியுள்ள ஒரு உணவு விடுதி' என்று குறிப்பிடப்படும் தற்போதைய ஒஸ்லோ விமானநிலையத்தை மாற்றிப் புதிய விமானநிலையத்தை எங்கு நிறுவுவது என்று பாராளுமன்றத்தில் விவா...



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

படிப் பார்த்தாலும் (தற்காலகமாகவனு-
ம்) இலங்கை பிளவு படாமல்தான் இருக்க
ப்போகிறது. இங்கு நாங்கள் பிளவு படாதி
ருத்தல் நல்லதல்லவா.

** கடந்த 19ம் திகதி நிகராகுவாநா
டெங்கும் விழாக்கோலம் பூண்டது. எல்லா
நாடுகளையும் போலவே நிக்கராகுவாவும்
அடக்கு முறைக்கு ஆளாகித்தான் இருந்தது.
மக்கள் மந்தைகளுக்குக்கூடச்சமமில்லை என்
பதைப்போல் சர்வாதிகாரி சாமோசா
நடத்திய 'ராஜ தர்பார்' மக்கள் புரட்சி
மூலம் தூக்கி வீசப்பட்டுப் புரட்சியாளர்க
ளான சன்டினிஸ்டாக்கள் ஆட்சியைக் கைப்ப
ற்றினர். இந் நிகழ்ச்சியின் பத்தாண்டு நி
றைவுக்கே நிக்கராகுவாமக்கள் வீதிகளில்
குழுமித் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி
னர். தனது சுரண்டலுக்கு வசதியாக 'ஜ
னநாயகம்' இருக்க வேண்டும் **என்று** கரு
தும் அமெரிக்கா கொன்ட்ரா கிளர்ச்சியா
ளர்கள் மூலம் நிக்கராகுவா ஆட் சியாள
ருக்கெதிராக திரைமறைவு யுத்தம் நடத்து
கிறது. மக்கள் மீது நம்பிக்கை வைத்துள்ள
சன்டினிஸ்டா அரசு சாதித்த வற்றுள் என்
னை மிகவும் கவர்ந்தது எழுத்தறிவு மிகக்
குறைவாயிருந்த நிக்கராகுவாவில் எழுத்த
றிவு படைத்தோரின் வீதத்தை சடுதியாக
உயர்த்தியது.'

** இந்திய சஞ்சிகையொன்றில் வெளிவ

உறுப்பினர்கள் [illegible] பேர் எதிர்க்கட்சி
யினருடன் சேர்ந்து வாக்களித்ததால் வி
மானநிலையம் கார்டூவனில் கட்டப்படா
மல் கூடுமில் கட்டப்பட வேண்டுமென்று தீ
ர்மானம் நிறைவேறியது. பிரிட்டனில் பா
ராளுமன்ற விவாதங்களை நேரடியாக
தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்ய
லாமா என்ற வாக்கெடுப்பில் ஆளும்கட்சி
உறுப்பினர்கள் தட்சரின் காலை வாரிவிட்
டு எதிர்க் கட்சியுடன் சேர்ந்துவிட,
விவாதங்கள் நேரடியாக ஒளிபரப்பலாம்
என்று தீர்மானிக்கப்பட்டது. பாராளும
ன்றஉறுப்பினர்களின் பதவிவிலகல் கடிதங்
களைச் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு
அரசியல் நடத்தும் எங்கள் நாடுகளில்
இப்படி நடப்பதென்பது வெறும் பகற்
கனவாக மட்டுமே இருக்கும்.

** ஒருமுறை முல்லா நசுருதீன் நீதி
மன்றத்திற்குச் சென்றிந்தார். வாதியின்
வழக்கறிஞர் வாதாடியதைப் பார்த்து
விட்டு 'இவர் சொல்லுவது சரி' என்றார்.
பின்பு பிரதிவாதியின் வழக்கறிஞர் வாதம்
புரிய அதையும் கேட்டுவிட்டு 'இவரது
வாதமும் சரிதான்' என்றாராம். இத
னை அவதானித்த முல்லாவின் நண்பர்
'என்ன நீங்கள் இருதரப்பினரையும் சரி
என்கிறீர்களே?' என்று கேட்டார்.
அதற்கு முல்லா 'நீங்கள் சொல்லுவதும்
சரிதான்' என்றார்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓ.....

தந்தூரி கோழிக்கறியின்

தரமான சுவை !


Chandan's

TANDOORI INDISK RESTAURANT

Storgata 22 (Dovrehallen), 0184 OSLO 1 - Tlf.: (02) 17 07 73 -

www.tamilarangam.net

# மைதானத்திலிருந்து...



- மகிந்தன் -

தமிழ் - நோர்வே மக்கள் இணைவுகூடம் நடாத்திய இருபது ஓவர்கள் கொண்ட கிரிக்கெற் சுற்றுப் போட்டி கடந்த மாதம் ஒஸ்லோவில் நடைபெற்றது. இச் சுற்றுப் போட்டியில் பங்கு கொண்ட பத்துக் கழகங்களும் மூன்று குழுக்களாக முறையே இரண்டு குழுக்களில் மும்மூன்று கழகங்களும், மூன்றுவதில் நான்கு கழகங்களுமாகப் பிரிக்கப்பட்டன.

முதலாவது குழுவில் தமிழ் விளையாட்டுக் கழகம், 'Ås'விளையாட்டுக் கழகம், 'Grass Hoppers' விளையாட்டுக் கழகம் ஆகியன போட்டியிட்டன. தமிழ் விளையாட்டுக் கழகம் அரையிறுதிப் போட்டிக்கு ஏனைய குழுக்களை வென்றதன்மூலம் தெரிவானது.

இரண்டாவது குழுவில் 'கொழும்பு விளையாட்டுக் கழக'மும், 'Holmelia' விளையாட்டுக் கழகமும், '11 Stars B' விளையாட்டுக் கழகமும் போட்டியிட, கொழும்புக் கழகம் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

மூன்றுவது குழுவில் '11 Stars A', 'Trondheim', 'Veitvet', 'Grønneløkka'ஆகிய கழகங்களில் மூன்று போட்டிகளிலும் வென்ற '11 Stars A'யும், இரண்டு போட்டிகளில் வென்ற 'Trondheim'உம் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. அரையிறுதிப் போட்டிகளில் கொழும்புக் கழகத்தை எதிர்த்து வென்ற தமிழ் விளையாட்டுக்

www.tamilarangam.net

கழகமும், Trondheim ஐ வென்ற 11 Stars A கழகமும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தமிழ் விளையாட்டுக் கழகம், இருபதாவது ஓவரில் 29 ஓட்டங்களுக்கு சகல வீரர்களையும் இழந்தது. சூரி வெகு சிறப்பாகப் பந்துவீசி ஐந்து வீரர்களை ஆட்டமிழக்கச் செய்தார். வெற்றி பெறுவதற்கு குறைந்தளவு ஓட்டங்களையே 11 Stars A பெறவேண்டியிருந்த போதும் ஓட்டங்களைப் பெறுவது மிகவும் சிரமமாகவே இருந்தது. எனினும் பதினூருவது ஓவரில் ஏழு வீரர்களை இழந்த நிலையில் 11 Stars A வெற்றி ஓட்டத்தைப் பெற்றது.

இப் போட்டியில் சிறந்த ஆட்டக்காரருக்கான பரிசை சூரியும், சிறந்த பந்துவீச்சாளருக்கான பரிசை ரவிராஜ் உம், தொடரின் சிறந்த துடுப்பாட்டக்காரரான பரிசை [redacted] மகானும் பெற்றனர். வெற்றி பெற்றோருக்கான பரிசுகள் ஆவணி 19ஆந் திகதி நடைபெறவுள்ள தமிழ் - நோர்வே மக்கள் இணைவுகூட 'கலாசார இரவு' நிகழ்ச்சியில் வழங்கப்படவுள்ளன.

---

([redacted] ஆம் பக்கத் தொடர்ச்சி)

*பற்றிய அறிவையாவது உள் வாங்கும் ஆர்வம் எமக்கு ஏற் பட்டாலே போதுமானது. இந்தக் கைங்கர்யத்தை தமி ழரிடம் ஏற்படுத்த இச் சஞ்சி கைகள் சிறிய அளவிலாவது முயலுதல் வேண்டும் என்ப தே, எனது பேரவா ஆகும்.*

---

உங்களுக்குத் தேவையான சகல புதிய, பழைய பாடல்கள் கொண்ட
AUDIO CASSETE - 27Kr.
DISK
ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்
செல்வன்
தொலைபேசி இல. 35736



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# மேற்கு நாடுகளில் தமிழ்ப் சஞ்சிகைகள்:
## சில பொதுக்குறிப்புகள்

இன்று தமிழில் வெளி வரும் சஞ்சிகைகள் குறித்துப் பேசுவோர்எவரும் மேற்குநாடுகளிலிருந்து வெளியாகும் சஞ்சிகைகளைத் தவிர்த்தல் முடியாது. மேற்கைரோப்பிய நாடுகளிலும் கனடாவிலும் வாழும் தமிழ்ச் சமூகத்தினர் மத்தியிலிருந்து கடந்த சில ஆண்டுகளாக இச் சஞ்சிகைகள் வெளிவருகின்றன. பார்வை, தூண்டில், சிந்தனை, சுவடுகள், புதுமை, கண், நமதுகுரல் முதலிய சஞ்சிகைகள் நான் பார்த்தவையாகும். இவற்றினை விட மேலும் பல சஞ்சிகைகள் வெளியாவதாய் அறிய முடிகிறது. மேலே குறிப்பிட்ட சஞ்சிகைகளின் பொதுப் பண்புகளைச் சுட்டும் அறிமுகமாக இக்குறிப்பு அமையும்.

### அகதிகளே காரணம்

இலங்கையின் இனப்பிரச்சனை, மேற்கு நாடுகளில் இச்சஞ்சிகைகளின் தோற்றத்திற்கு வழிவகுத்த ஒரு முக்கிய காரணியாகும். குறிப்பாக எண்பதாம் ஆண்டுகளின் முற்பகுதியில் கூர்மையடைந்த இனப்பிரச்சனை சர்வதேச அரங்கில் இலங்கைத் தமிழ் அகதிகள் என்ற புதிய சித்திரத்தைத் தோற்றுவித்தது. தமிழ்ப் பகுதிகளில் இராணுவ ஒடுக்குமுறை, அரசின் பொரு

www.tamilarangam.net

ளாதார ரீதியான பாரபட்சம் முதலியவற்றுக்கு அஞ்சி முன்னெப்போதும் இல்லாத வகையில் பெருந்தொகையான தமிழர்கள், குறிப்பாக இளம் வயதினர் மேற்கைரோப்பிய நாடுகளுக்குச் சென்றனர். இவர்கள் பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, டென்மார்க், நோர்வே, இங்கிலாந்து முதலிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரினர். (சமீபகாலங்களில் இலங்கையிலிருந்து வெளியேறும் தமிழர்களின் கவனத்தைக் கனடாவும் ஈர்த்துள்ளது.)

## கலைச்சாரல்

மொழி, கலாசாரம், பொது அபிவிருத்தி போன்றவற்றில் பாரிய வேறுபாடுள்ள அந்நிய நாடுகளிற் பெருந்தொகையினராக வாழும் இந்நிலை, இவர்களிடம் குறிப்பிட்ட சில தேவைகளைத் தோற்றுவித்துள்ளது. இவற்றில் ஒன்று வாசிப்புத் தேவையாகும். தமிழில் வாசிப்பதற்கும், தகவல்கள் பெறுவதற்கும் பொழுதுபோக்கிற்கும் கூட நூல்களும், சஞ்சிகைகளும் வேண்டியுள்ளன. இத்துடன் இந்நாடுகளில் வாழும் தமிழ் இளைஞர்களிற் சிலர் இலங்கையில் இருக்கும் போது அரசியலிலும் இலக்கியத்திலும் ஒருசேர ஆர்வம் கொண்டிருந்தோராவர். இச்சஞ்சிகைகள் சிலவற்றுடன் இவர்களும் தொடர்பு கொண்டுள்ளனர். தற்போது வெளிவரும் சஞ்சிகைகளின் தோற்றத்தை இப்பின்னணியிலேயே விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

## அமைப்பு

மேலே குறிப்பிட்ட சஞ்சிகைகளிற் 'பார்வை' கனடாவின் மொன்றீல் நகரிலிருந்து வெளியாவதாகும். 'தூண்டில்', 'சிந்தனை', 'நமது குரல்', 'புதுமை' ஆகியவை மேற்கு ஜேர்மனியிலிருந்தும் 'தமிழ் முரசு' 'கண்' ஆகியவை பரீஸ் நகரிலிருந்தும் 'சுவடுகள்' ஒஸ்லோவிலிருந்தும் பிரசுரமாகின்றன. இவை அமைப்பிலும் அளவிலும் ஏறத்தாழ ஒரே வகையின. 20 செ. மீ. X 15 செ. மீ. அளவில் சராசரி 40-50 பக்கங்கள் கொண்டவையாக தட்டச்சிலும் கையெழுத்திலும் ஆக்கப்பட்டு போட்டோ பிரதி முறையில் தயாரிக்கப்பட்டவை. போட்டோ பிரதி செய்தல் இந்நாடுகளில் மிக மலிவு ஆகும். இவ்வசதியை இவை பயன் படுத்துகின்றன. தமிழ் கணனி ஒன்று 'சுவடுகள்' குழுவினருக்குக் கிடைத்திருப்பதாகவும், அதனைப் பயன்படுத்தி இவ்வருடத்துச் சுவடுகள் சில வெளிவந்ததாகவும் அறிந்தேன் 'பார்வை' யும் சில பக்கங்களில் குறிப்பாக விளம்பரங்களுக்கு கணனி அச்சினைப் பயன்படுத்தியுள்ளது. இச்சஞ்சிகைகள் பெரும்பாலும் மாதாந்தம் பிரசுரிக்கப்படுபவையாகும்.

## மேற்கு ஜேர்மனியில்— கனடாவில்

மேலே குறிப்பிட்ட சஞ்சிகைகளுள் மேற்கு ஜேர்மனியின் ஸ்ருகாட் நகரிலிருந்து வெளி

www.tamilarangam.net

வரும் 'சிந்தனை' சஞ்சிகை 85 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. "தமிழ் மக்களின் இருள் சூழ்ந்த, நிச்சயமற்ற நிகழ்காலத்தில் தெளிவான சிந்தனை ஊடாக முறையான அரசியல் கோட்பாடுகளை ஆராய்ந்து ஸ்திரமான

□□ சித்ரா □□

பாதையில் செல்வதே நமது குறிக்கோளாகும்" என்ற வாசகத்துடன் இது பிரசுரிக்கப்படுகிறது. இச்சஞ்சிகையில் பொதுவாக அரசியல் கட்டுரைகளும் செய்திக்குறிப்புகளுமே இடம் பெறுகின்றன. வெளிப்படையான அரசியற் கருத்துடைய கவிதைகளும் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன.

'தூண்டில்' சஞ்சிகை மேற்கு ஜேர்மனியில் இயங்கும் தென்னாசிய நிறுவனத்தால் வெளியிடப்படுவது. இந்நிறுவனம் 1986 ஆம் ஆண்டிலிருந்து வெளியிட்டுவந்த தமிழ்ச்செய்திக் குறிப்பே 1988 இல் தூண்டில் சஞ்சிகையாக மாற்றம் பெற்றது. இலங்கைச் செய்திகள், அரசியல் தஞ்சம் தொடர்பான சட்டங்கள், செய்திகள் ஆகியவற்றுடன் கவிதை, கட்டுரை, சிறுகதை, தொடர் கதை முதலியனவும் தூண்டிலில் முக்கிய இடம் பெறுகின்றன. மொன்றீல் நகரில் இயங்கும் தமிழர் ஒளி இயக்கத்தின் முயற்சியால் 'பார்வை' வெளிவருகிறது. "நடுநிலையிலிருந்து நல்ல விடயங்களை மக்களுக்குத் தெரியப்படுத்தும்" பல்சுவை இதழாக அமைவது






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதன் நோக்கமாகும். அரசியல் கட்டுரைகளுடன் இலக்கியக் கட்டுரைகள் இடம் பெறுவது இதன் சிறப்பம்சமாகும். இங்கு குறிப்பிடப்படும் சஞ்சிகைகளுள் இலக்கியத் திறந்த அதிக முக்கியத்துவம் அளிப்பதாகப் பார்வை விளங்குகிறது.

## பெண்களின் வெளியீடு

இங்கு குறிப்பிடப்பட்டவற்றில் இரு சஞ்சிகைகள் பெண்கள் ஸ்தாபனங்களால் வெளியிடப்படுபவை என்பது குறிப்பிடற்குரியது. 'கண்' பாரிஸில் இயங்கும் இலங்கை மகளிர் சங்கத்தினாலும் 'நமது குரல்' ஹேர்ண பெண்கள் வட்டத்தினராலும் வெளியிடப்படுபவையாகும். கண் பத்திரிகையில் இடைக்கிடை பிரெஞ்சு மொழியிலும் கட்டுரைகள் வெளியாவதுண்டு. சுய ஆக்கங்கள் தவிர வேறு பத்திரிகைகளிலிருந்து பொருத்தமான கட்டுரைகளையும் கண் மறுபிரசுரம் செய்கிறது. உதாரணமாக, பெண்ணின் குரல் – எட்டாவது இதழில் வெளிவந்த 'எமது சமூகமும் பெண்களும்' கண் இதழில் இடம் பெற்றுள்ளது. பெண்களின் இத்தகைய பிரசுர முயற்சிகள் வரவேற்கத்தக்கவை. எனினும் பெண்கள் பிரச்சனைகளை அணுகுவதற்கும் தீர்ப்பதற்கும் உரிய பொருத்தமான, தெளிவான நிலைப்பாடு இவற்றுக்குக் குறைவு என்பது, இச் சஞ்சிகைகளின் எனக்குக் கிடைத்த இதழ்களைப் பார்க்கும்போது தெரிகிறது. இதனை நிவர்த்திசெய்ய முயலவேண்டும். மேலும் இன்னோர் விடயம், சொந்த நாட்டை விட்டுப் புலம் பெயர்ந்து வாழும் மக்கட் கூட்டத்தினர் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு பெண்களும் உள்ளாவதுடன் மேலதிகமாக வேறு பிரச்சனைகளையும் எதிர்நோக்குகின்றனர். அந்நிய சூழல், மொழி, வீடுகளுள் தனிமைப்பட்டுக் கிடக்கும் நிலை ஆகியவை ஆண்களை விடப் பெண்களை அதிகளவு 'அந்நியமாதலு'க்கு உட்படுத்துகின்றன. இத்தகைய பிரச்சனைகளை இனங்கண்டு உதவ பெண்கள் அமைப்புக்கள் முன்வரவேண்டும். சஞ்சிகைகள் கூட பெண்களின் தனிமைப்பட்ட நிலையைக் குறைப்பதிலும் அவர்களை ஒருங்கிணைப்பதிலும் உதவலாம்.

## தமிழர் அரசியல்

இங்கு குறிப்பிட்ட சஞ்சிகைகள் யாவற்றிலும் காணப்படும் பொதுத்தன்மை, இலங்கைத் தமிழ்ப் பகுதிகளின் அரசியல் பற்றிய அக்கறையாகும். இந்த அக்கறை செய்திகளாகவும் அரசியல் விமர்சனமாகவும் வெளிப்படுகிறது. தமிழ்மக்களின் பிரச்சனைகளுக்கு நீதியான, சமாதானத்தை நிலைக்கச் செய்யும் தீர்வு வேண்டும் என்பதை இச்சஞ்சிகைகள் யாவுமே வலியுறுத்துகின்றன, தமிழ் குழுக்களிடையே ஒற்றுமையும் இவை விழையும் இன்னோர் அம்சமாகும். இச் சஞ்சிகைகளில் இடம்பெறும் கவி

www.tamilarangam.net

...தைகளில் அதிகமானவையும் இக்கருத்துகளைப் பிரதிபலிக்கின்றன.

## தொடர்கதை

பார்வை, தூண்டில், ஆகிய இரு சஞ்சிகைகளும் தொடர் கதைகளைப் பிரசுரிக்கின்றன. பார்த்திபன் எழுதும் 'கனவை மிதித்தவன்' என்ற தொடர் கதை தூண்டிலில் இடம்பெறுவது. ஜேர்மனியிலும், இலங்கையிலும் கதை நடைபெறுகிறது. ஜேர்மனியில் அகதிகளாயுள்ளோரும் இலங்கையில் தமிழர்களும். எதிர்நோக்கும் அரசியற் பிரச்சனைகளைச் சுற்றிக் கதை ஓடுகிறது. எனினும் கதையில் இறுக்கமும் மையக் குவிவும் குறைவாகவேயுள்ளன. 'பார்வை' யில் செழியன் எழுதும் 'ஒரு மனிதனும் எங்கள் தேசமும்' எனும் தொடர்கதை இடம் பெறுகிறது. இலங்கையில் இராணுவ அடக்குமுறையால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் பாதுகாப்புக்காக இந்தியாவுக்குச் செல்வதைப் பின்னணியாகக்கொண்டு இக்கதை ஆரமபமாகயுள்ளது. இவ்விரு சஞ்சிகைகளும், சுவடுகளும் சிறுகதைகளைப் பிரசுரிப்பதில் ஆர்வம் காட்டுகின்றன.

## கவிதை

கவிதைகளுக்கு எல்லாச் சஞ்சிகைகளும் இடமளித்துள்ளன. பார்வையில் செல்வம், செழியன், ஆனந்த் பிரசாத் ஆகியோர் அடிக்கடி எழுதுகின்றனர். சேரன், ஜெயபாலன் ஆகியோரின் சில கவிதை

## பொம்மைகள்



குழந்தைகள் திருவிழாவில்
அவர்களின் ஆயுத விமானங்கள்
குண்டுகளுக்குப் பதிலாக
பொம்மைகளைப் போட்டன:
விற்பனை நிபுணர்கள் சொன்னார்கள்
"இது–
ஒரு நல்லெண்ணத்தை ஏற்படுத்தும்"
உலகமுழுவதும்
இது மிகப்பெரும் மதிப்பை
உருவாக்கத்தான் செய்தது.

அதே விமானங்கள்
பதினைந்து நாட்களுக்குமுன்...
பொம்மைகளைப் போட்டுவிட்டு,
இப்போது–
குண்டுகளைப் போட்டிருந்தால்
என் இரு குழந்தைகளுக்கும்
உங்கள் தயவில்
அந்த இரண்டு வாரங்களுக்கு
விளையாட–ஏதாவது
கிடைத்திருக்கும்.

– ஏரிக் ப்ரைட்
ஆஸ்திரியக் கவிஞர்

www.tamilarangam.net

களும் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளன. புதுமை சஞ்சிகையும் கவிதைகளை வெளியிடுவதில் ஆர்வங்காட்டுகிறது. குறிப்பாக ஜெயபாலனின், ஐரோப்பியப் பின்னணியுடைய சில புதிய கவிதைகள்—'பைன் மரக்காடும் இலையுதிர் காலமும்' போன்றவை புதுமையில் வெளிவந்துள்ளன. மொழிபெயர்ப்புக் கவிதைகளும்குறிப்பிடத்தக்கன. பார்வை ஜனவரி '89 இதழில் உருதுக் கவிஞர் பெய்ஸ் அகமது பெய்ஸின் இரு சிறு கவிதைகள்; செப்டம்பர் '88 இதழில் கறுப்பு இயேசுநாதர், சிரிக்கக் கற்றுக்கொடு மகனே!; சுவடுகள் நவம்பர் '88 இதழில் கறுப்புத் தொழிலாளிகள் எனும் அங்கோலாக் கவிதை முதலியவை மொழிபெயர்ப்புக் கவிதைகளுக்கு உதாரணங்களாகும்.

## மறுபிரசுரம்

இச்சஞ்சிகைகளின் இன்னோர் பொதுத்தன்மை இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் ஏற்கனவே பிரசுரமானவற்றில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து மறுபிரசுரம் செய்வதாகும். பார்வை, சுவடுகள் ஆகியவை இதனைத் தொடர்ச்சியாகச் செய்கின்றன. வாசகர்களின் ரசனையையும் அறிவையும் மேலும் உயர்த்தும் வகையில் இம்மறுபிரசுரங்கள் அமைகின்றன. இதுமிக வரவேற்கக் கூடியதே. எனினும் இவற்றைப் பிரசுரிக்கும்போது சஞ்சிகையாசிரியர்கள் இவை எங்கிருந்து பெறப்பட்டன என்பதை மறக்காமல் குறிப்பிடுதல் தர்மமாகும். 'அலை' யில் வெளியாகிய 'கோசலை' என்னும் சிறுகதை 'பாலத்'தில் மறுபிரசுரம் செய்யப்பட்டது. இது பாலம் சஞ்சிகையில் வந்த அதேவடிவில் சுவடுகள் நவம்பர் '88 இதழில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அக்கதையின் மூலம் பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை. இதே இதழில் வெளியான சேரனின் எரிந்து கொண்டிருக்கும் நேரம் கவிதையும் ஏற்கனவே பிரசுரமானதே. இது எங்கிருந்து பெறப்பட்டது என்ற குறிப்பும் இல்லை. பார்வை செப்டம்பர், ஒக்டோபர் '88 இதழ்களில் எம். ஏ. நுஃமானின் 'தமிழ் சினிமா' என்ற கட்டுரை இடம்பெற்றுள்ளது. இது அவரது திறனாய்வுக் கட்டுரைகள் (1985) என்ற நூலில் உள்ள கட்டுரையாகும். ஆனால் பார்வையில் அதுபற்றிய எது வித தகவலுமில்லை. அத்துடன் திறனாய்வுக் கட்டுரைகள் தொகுப்பில் 'தமிழ் சினிமாவும் இலங்கையில் அதன் செல்வாக்கும்' என்பதே கட்டுரையின் தலைப்பு. ஆனால் பார்வையில் தமிழ்ச் சினிமா என்று மாத்திரமே உள்ளது. இத்தகைய குறைபாடுகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

## செய்யப்பட வேண்டியவை

மேற்கு நாடுகளிலிருந்து தற்போது வெளியாகும் சஞ்சிகைகள், தத்தமது நாட்டு மொழிகளின் இலக்கிய முயற்சிகள், புதிய விருத்திகள் குறித்து சிறிய அளவிலாவது தமிழ் வாசகர்கட்கு அறிமு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கம் செய்ய முயலுதல் வேண்டும். ஏனைய கலைமுயற்சிகள் பற்றிய தகவல்களையும் சேர்த்துக் கொள்ளலாம். இது உலகின் பொது ஓட்டம் பற்றிய அறிவை வளர்ப்பதாகும். பிரபல ஓவியங்கள், சிற்பங்களின் புகைப்படங்களைச் சேர்ப்பது மூலமும் கவிதை மொழி பெயர்ப்புகள், நூல் அறிமுகங்கள் பேட்டிகள் போன்றவை மூலமும் இதனைச் செய்யலாம். உதாரணமாக புதுமை (ஏப்ரில்—ஜுன் 1988) இதழில் இந்நூற்றுண்டின் பிரபல ஓவியர் பிக்காஸோ வின் மிகமுக்கியமான சுவரோவியம் குவர்ணிக்கா (1937) வின் சிறிய ளவிலான பிரதி இடம்பெற்றுள்ளது; வரவேற்கத்தக்க முயற்சி. ஆனல் அந்த ஓவியம்பற்றிய அடிப்படைக் குறிப்புகள் சிலவற்றைச் சேர்த்திருப்பின் மேலும் சிறப்பாக இருந்திருக்கும். (இத்தொடர்பில் பிரான்ஸிலிருந்து கலாமோகன் என்பவர் அங்கு நடக்கும் கலை இலககிய முயற்சிகள் பற்றி வீரகேசரியில் அடிக்கடி எழுதுவதைக் குறிப்பிடலாம்) இததகைய முயற்சிகளில் திட்டமிட்டும் உணர்வு பூர்வமாகவும் இச் சஞ்சிகைகள் ஈடுபட வேண்டும

மேற்கு நாடுகளில் தமிழர் சமூகம் ஒன்று தவிர்க்க முடியாதபடி இன்று உருவாகிக் கொண்டிருக்கிறது. மேற்குலகின் அபிவிருத்தியையும், வளர்ச்சியையும், முற்போக்கான அம்சங்களையும் முடியுமானவரை உள்வாங்கும் சாத்தியத்தை இச் சமூகம் வளர்த்துக் கொளளுதல் வேண்டும். ஆனல் இதனை எவரும் பெரிய அளவில் உணர்ந்ததாய்த் தெரியவில்லை. மேற்குலகின் முன்னேற்றகரமான பௌதீக ரீதியிலான வசதிகளை (material comforts) முடியுமானவரை அனுபவித்துக் கொண்டிருந்தபோதும் இத் தமிழர் சமூகம் வேறு விடயங்களில் மூடிய மனப்போக்கையும் வைதீகப் பெறுமானங்களையுமே பேணுகின்றது. கலை, இலக்கிய விடயங்களில் ஆழ்ந்த தேடுதலின்மை இதன் ஒரு வெளிப்பாடாகும். சென்ற வருடம் நான் பரீஸ் நகரத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு பிக்காஸோவின் ஓவியக் காட்சிச் சாலையையும் அகஸ்தே றொடினுடைய சிற்பக் காட்சிச் சாலையையும் பார்ப்பது எனது முக்கிய நோக்கமானது. நான் சந்தித்த பல தமிழ் நண்பர்கள் நீண்ட காலமாய் பரீஸில் வசிப்பவர்கள்; பிரெஞ்சு மொழி அறிந்தவர்கள்; கணிசமான பொருளாதார வசதி படைத்தோர்; கலை இலக்கிய ஆர்வலர்களும் கூட. ஆனல் ஓவியச் சாலையும் சிற்பக்கூடமும் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. இத்தனைக்கும் பிக்காஸோ ஓவியக் காட்சிச் சாலைக்கு அனுமதி இலவசம்! றொடின் காட்சிச் சாலைக்கோ 15 பிராங்குகள்! (ரூபாய் 75/=)

கலைத்தேட்டங்களில் எமது அக்கறையின்மையின் ஒரு அடையாளமாகத்தான் இது எனக்குத் தென்பட்டது. இந்நிலை மாறுதல் வேண்டும். "சென்றிடுவீர் எட்டுத்திக்கும், கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!" எனப் பாடினுன் பாரதி. கொணர்ந்திங்கு சேர்க்கும் நிலை எமக்கில்லை. ஆனல் அவை

(தொடர்ச்சி 4 ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய உணவுகளின் இன்சுவையை
அனுபவிக்க எம்மிடம் வாருங்கள்!


PEACOCK

RESTAURANT

TØYEN GATA 26
0578 OSLO 5
NORWAY
TLF: (02)191284 /689375

16.00 - 23.00 வரைக்கும் திறந்திருக்கும்

www.tamilarangam.net






இயக்குதல் போல மனதில் பிரமை.
சென்றதோர் உழவு நாட்களில் தானே
அவனையும் அவனது மகவையும் இழந்தேன்.
கிசுகிசுவென்று நெற்பயிர் வளர்ந்து
வயல்களில் பொற்கதிர் சரிவதுபோல
மீண்டும் பிரமை.
அறுவடை வயலில் நடப்பது போலவும்
மாப்பாணனையும் என்னையும் பற்றியே
கிண்டல்கள் பேசி

அறுவடைக்காரர் சிரிப்பது போலவும்
ாயத் தோற்றம்.
ாழாவெட்டியாய்ப் போனேனே என
ானது சிதைந்து வாய் விட்டழுதேன்.
ன்னடி என்னடி என்றாள் ஜுலி
தலைவலி என்றேன்......

உணவை நான் பார்க்கிறேன்
ீடு செல் என்றாள்.
ிரும்பி நடந்தேன்
ாப்பாணன் என்னை அழைப்பதுபோல
ீண்டும் மாயை.

ீடு வந்தவள் பாயில் வீழ்ந்தேன்
ஓவென்றழுதேன்.
தலையணையாக மாப்பாணன் கிடப்பதாய்
ீண்டும் மாயை...
மாப்பாணனை ஆரத் தழுவி
கண்ணீர் உகுத்தேன்.
அவனது பாடல் ரீங்காரம் கேட்டது.

யாருக்கு வந்ததிந்த வெள்ளி நிலவு
என் ரதிதேவி இல்லாத மாலைப் பொழுது
போருக்கு நின்றதென்ன தென்றல் காற்று



www.tamilarangam.net

புண்ணாக நோகவைக்கும் குயில் பாட்டு
பச்சை வயல் பக்கத்திலே நீரோடை
அங்கு பால் நிலவு போர்த்து வைக்கும் நிழலாடை
எத்தனையோ வேளையிலே இனித்ததடி
நிலா ஏனிந்த வேளையிலே முறைக்குதடி.

பாடலோடு தூங்கிப் போனேன்...
தூக்கத்திடையோர் கனவு உதித்தது.
ஏழு குதிரைகள் பூட்டிய தேரில்
மாப்பாணன் வந்தான்
அன்பே என்றான்...
சுவர்க்கம் முதலாய்ப் பதிநான்குலகும்
சென்று வந்த சேதிகள் சொன்னான்.
''எமது வயலில் உழைப்பது போலவும்
உன்னுடன் கூடி இருப்பது போலவும்
இனிமை எங்கும் கண்டிலேன்'' என்றான்.

ஏழு குதிரைகள் பூட்டிய தேரில்
வயலுக்குச் சென்றோம்,
டாங்கிகளோடு சிங்கள ராணுவம்
வயலில் நின்றது...
நாய்கள் என்று கத்தியபடிக்கு
கண் விழிக்கையிலே உயிர் துணுக்குற்றது.
என்னைச் சூழ
காக்கிச் சட்டை ஒநாய்க் கூட்டம்,
போலி வீரப் பதக்கங்களோடு
ஒருவன் குனிந்தான்.
ஜூலி எங்கே என்ற படிக்கென்
சட்டையைக் கிழித்து மார்பைத் திருகினான்.
சிறிலங்கா ராணுவ முகாம்களைத் தாக்க
திட்டம் போட்டதா என்றபடிக்கு
வேறு ஒருவன் யோனியில் கடித்தான்.
'கஸ்ரோ'வுடைய வைப்பாட்டிக்கு
சேலை எதற்கென நிர்வாணப் படுத்தினர்

இராணுவத் தளபதி தன் சட்டையைக் கழற்றினான்...
மூச்சுத் திணறினேன்.
நினைவை இழந்தேன்.
கண் விழிக்கையிலே
பாலி ஆற்றுத் தாயின் மடியில்
தலை சாய்ந்திருந்தேன்.
எனது ஆருயிர்க் காடுகள் யாவும்
கோபத்தோடு
காற்றிலே தலைகளை மோதிக் கொண்டன.
கதையை நிறுத்தி ரதி புன்னகைத்தாள்
'கெடுக சிந்தை'.

ஒலி அடங்கியது.
வானில் என்றுமே தோன்றா அழகுடன்
பௌர்ணமி நிலவு,
பௌர்ணமிக்கு வெண் பட்டாடையாய்
பனி கொட்டியது.

காட்டின் ஆழத்திருந் தொரு கலைமான்
மனம் கசிந்து கூவுதல் கேட்டது.
'மாப்பாணா' என்ற ரதியின் கூச்சல்...
எல்லாம் ஒரு நொடியின் துகளில்.
பாலியாற்றில் மண் சிலையாக
கரைந்தனள் தேவி.

பாலி ஆற்றில் வெள்ளம் தணிந்தது.
மரங்கள் நிமிர்ந்தன
வரால் மீன் ஒன்று துள்ளிப் பாய்ந்தது...

நான் அதிர்ந்து போயிருந்தேன்.
ஆற்றில் பாய முனைந்த என்னை
வீரன் தடுத்தான்......

காடும் தொலைதூரத்துத் தேயிலை மலைகளும்
ஆம் ஆம் என்று எதிரொலி செய்ய
வானில் எழுந்தது வார்த்தைகள்.
''ஒரு பொழுதில் பேனா ஒரு பொழுதில் யாழ்
ஒரு பொழுதில் பதாகை மற்றொரு பொழுதில்
போர்வாள் என்
ஈழநாட்டிலும் இலங்கைத் தீவிலும்
உலகப் பந்தின் ஒவ்வோர் புறத்திலும்
மானிடம் முன் செல்லும்
மனம் தளராதீர்...''
வானில் வெண் புரவி மேல் ஒருவன் மறைந்தான்.

கைகளில் வீரனைத் தூக்கியபடிக்கு
எழுந்தபோது
தொலைதூரத்துக் கிராமங்களிலே
சேவல் கூவும்.

(திணைவரசன்)



www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப் போட்டி இல.6

குறுக்கெழுத்துப் போட்டி இல.5இல் ஒரு சிறு தவறு நேர்ந்திருந்தது. சில வாசகர்கள் இத்தவறினைத் திருத்தி சரியான விடைகளை எழுதியிருந்தனர். வேறு சிலர் இச்சொல் தவிர்ந்த ஏனையவற்றுக்கு சரியான விடைகளை அனுப்பினர். இவர்களையும் சரியான விடை அனுப்பியோரின் பட்டியலில் சேர்க்கிறோம். நாம் ஏற்படுத்திய சிறு தவறினால் இவ்வாறான சிரமம் ஏற்படுத்தியதற்கு வாசகர்களை மன்னிக்க வேண்டுவதோடு இனிமேல் இவ்வாறான தவறுகள் நேராதென உறுதியளிக்கிறோம்.

இல.5 சரியான விடைகள்:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| ச | ந் | நி | யா | ச | ம் |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| தி | ■ | தி | ர் | க | |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| ர் | த | பா | ர் | டை | வ |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| தே | ர் | வ | ட | ம் | ஞ் |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| வ | ம | ம் | த | த் | ச |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |
| தை | ம் | ஓ | ம் | யா | னை |

பரிசுபெறும் மூவர்:-

1)கா.சிவகௌரி - ஒஸ்லோ 10
2)எம்.நியூட்டன் - ஸ்தவாங்கர்
3)திருமதி.சு.முருகேந்திரன் - பன்டோப்த்

பாராட்டுப் பெறுவோர்:-

1)பத்மினி விமலநாதன் - ஒஸ்லோ 9
2)தி.தயாநிதி
3)செல்வி.க.கிருபாராணி
4)அனுரா தவேந்திரா
5)கே.பிரபாகரன்
6)பெயர் குறிப்பிட மறந்த வாசகர்

## குறுக்கெழுத்துப் போட்டி இல.6

மேலிருந்து கீழ்

போட்டி நடாத்துனர்:- சதா சிறீதரன்
பரிசில்கள் வழங்குவோர்:- சதா சிறீதரன், உதயகுமார்

1) பிச்சை
3) ஜேர்மனியிலிருந்து கனடாவுக்கு எம்மவரைக் கொண்டு சென்றது; குழம்பியுள்ளது.
5) குழம்பியுள்ள குடு
8) கொழுதுபோக்குகளில் ஒன்று; தலைகீழாகி விட்டது.

www.tamilarangam.net

11)பிழை
13)இவர் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்
15)கூட்டங்களில் எறியப்படுவது
20)பழைய நினைவுகளில் இது நிறைந்திருக்கும்
24)ஒரு பருவம்

## இடமிருந்து வலம்

1) சங்கிலியன் ஆண்ட இடம்
4) இது இல்லாது வில்லிற் பயனில்லை
7) தொடர்பு
9) எல்லார் வாழ்விலும் இது இருக்கும்
13)ஊரில் மண் அள்ள உதவுவது
20)மனித உறுப்புகளில் ஒன்று
22)இடம் மாறிவிட்ட காயம்
23)நாம் வாழும் இடம்
26)தொந்தரவு தரும் ஒரு சிறு பிராணி
32)ஒரு பறவை
34)வீதியிலிருந்து வீட்டுக்கு வருமுன் இருப்பது

RAVI
2569025
Stuttg

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

HERSLEBS GATE 43
0578 OSLO 5
NORWAY
PHONE: (02) 67 47 76

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளை அனுப்பினால் அவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. உங்கள் முகவரிகளை தெளிவாக எழுதி அனுப்புங்கள். இல.4இல் பரிசுபெற்றோர்க்கும் இல.5இல் பரிசுபெற்றோர்க்குமான பரிசுகள் வெகுவிரைவில் அனுப்பிவைக்கப்படும். பரிசில்கள் அனுப்புவதில் ஏற்பட்ட தாமதங்களுக்கு வருந்துகின்றோம்.

www.tamilarangam.net


இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான உணவுப் பொருட்களை மலிவான விலையில் நீங்கள் பெறவேண்டுமானுல் எங்களிடம் வாருங்கள்.

# CEYLON MAT A.S

21, DRONNINGSGATA, 0152.OSLO.1. T.P:332619

உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் நோர்வேயின்

எப்பகுதிக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

www.tamilarangam.net

'கலையே வாழ்வாகி' 'வாழ்வே கலையாகி'

யாழ். கலாசாரப் பேரவையினர் பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடாத்திய நாடக, அரங்க பயிற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த 87இன் முற்பகுதி ஞாயிறுகளில் ஒன்று. வழமையாகக் களப்பயிற்சி நிகழ்த்துவோர் ஒருபுறம் இருக்க, ஒரு 'வயது முதிர்ந்த இளைஞர்' மண்டபத்துள் வருகிருர். அறிமுகப் படலம் முடிந்த சில நிமிடங்களிலேயே அங்கிருந்த அத்தனை பேரையும் தனது குரலால், நடிப்பால், நகைச் சுவையால், துடிப்பால் ஆட்கொண்டுவிடுகிருர் அக் கலைஞர். அன்றுதான் என்னை மிகவும் கவர்ந்த ஒரு கலைஞரான நடிகமணி வி.வி.வைரமுத்துவை நேரில் சந்திக்கிறேன்.

முன்பெல்லாம் சிறுவஞயிருந்த காலத்தில் கோயிலில் விடியவிடியக் கூத்து நடக்கிறதென்ருல், அங்கு நடிப்பவர் நடிகமணியாகத்தான் இருக்க வேண்டும். மக்களை தன்வசம் ஈர்த்து 'யாரடி கள்ளி நீ' என்று நடிகமணி பாடுவதை ஒலிபெருக்கி இல்லாமலே நீண்ட தூரம் கேட்க முடியும். சிறுவஞயிருந்த காலத்தில் அவரது ஆற்றலை முழுமையும் எடைபோட என்னுல் முடியவில்லை. நான் அவரது கலைகளைக் கோயில்களில் கண்டு இரசிக்கவேண்டும் என்று விரும்பிய பருவத்தில் கோயில்கள் திருவிழாக்களே இல்லாது மூடப்பட்டிருந்தன.

அரங்கப் பயிற்சியில் ஒரு குடும்பமாய் எல்லா வேறுபாடுகளையும் மறந்து ஆர்வமுடன் பயின்றுகொண்டிருந்த எங்களை நடிகமணி ஒரேயொரு நாள்தான் சந்தித்தார். எனினும் அன்று முழுதும் எம்முடன் இருந்தார். 'கட்டித் தங்கம் வெட்டியெடுத்து' என்ற பாடலுக்கு உண்மையாகவே வெட்டியெடுப்பதுபோல் நகைச்சுவையாக நடித்துக் காட்டிய நடிகமணியை அன்று களப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த எவரும் மறக்கமாட்டார்கள்.

2500 தடவைகளுக்குமேல் மேடையேறிய அரிச்சந்திர மயான காண்டம், பக்த நந்தஞர், பூதத் தம்பி, சத்தியவான் சாவித்திரி போன்ற நாடகங்கள்மூலம் கிராமத்து மக்களிடையே புகழ் பெற்றிருந்த நடிகமணி இம்மாத முற்பகுதியில் கொழும்பில் மரணமாஞர் என்ற செய்தி, நடிகமணியை அறிந்த எவருக்கும் வேதனை தருவதே.



எமது நாடக மரபை நாமே பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற தீரா வேட்கையில் வாழ்வைக் கலையாகவும், கலையை வாழ்வாகவும் வாழ்ந்து காட்டியவர் நடிகமணி. எங்கள் பாரம்பரியக் கலை வடிவங்களை மேலும் மெருகூட்டிப் பேணிப் பாதுகாப்பதே அந்தக் கலைஞரி உயர்ந்த உள்ளத்துக்கும் ஆற்றலுக்கும் நாம் தரும் காணிக்கையாய் இருக்கமுடி

- இளவாலை விஜயேந்திரன் -